கடவுள் துணை.

பாம்பன் பாலசுப்பிரமணியசுவாமி கோவில்

# கும்பாபிஷேக வழிநடைச்சிந்து.

இஃது

மதுரைஜில்லா இளையான்குடி தாலூகா சோதுகுடிகிராமம் மகா-ள-ள-ஸ்ரீ

மு. கலிங்கமீருகனிராவுத்தரவர்கள் குமாரரும்

புதுவைச் செந்தமிழ் நாவலர் மகா-ள-ள-ஸ்ரீ

பு. த. செய்யப்பமுதலியாரவர்கள் மாணாக்கரும்

இளையான்குடி ஸ்பெஷல் மேஜிஸ்திரேட்டும்

சிவகங்கை தாலூகா போர்டு மெம்பரும் ஆகிய

காசீம் என்ற மறுநாமம்பூண்ட மகா-ள-ள-ஸ்ரீ

**M. K. M.** அப்துல்காதிறு ராவுத்தரவர்களால்

இயற்றப்பெற்றது.

கோட்டையூரிலிருக்கும் சிவகங்கை தாலூகா போர்டு மெம்பரும்

மதுரை டிஸ்திரிக்டு போர்டு மெம்பரும் ஆகிய மகா-ள--ளஸ்ரீ

பெ. மு. அ. ராம. முத்தையா செட்டியாரவர்கள்

பொருளுதவியால்

மதுரை ஸ்ரீ மீனாம்பிகை பிரசில் பதிப்பிக்கப்பெற்றது

1904௵ ஏப்ரல்௴

இதன் விலை அணா இரண்டு.

உ

கடவுள் துணை.

பாம்பன் பாலசுப்பிரமணியசுவாமி கோவில்

# கும்பாபிஷேக வழிநடைச்சிந்து.

இஃது

மதுரைஜில்லா இளையான்குடி தாலூகா சோதுகுடிச[illegible]மம மகா-ா-ா-ஸ்ரீ

மு. கலிங்கமீருகனிராவுத்தரவர்கள் குமாரரும்

புதுவைச் செந்தமிழ் நாவலர் மகா-ா-ா-ஸ்ரீ

பு. த. செய்யப்பமுதலியாரவர்கள் மாணாக்கரும்

இளையான்குடி ஸ்பெஷல் மேஜிஸ்திரேட்டும்

சிவகங்கை தாலூகா போர்டு மெம்பரும் ஆகிய

காசீம் என்ற மறுநாமம்பூண்ட மகா-ா-ா-ஸ்ரீ

எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தரவர்களால்

இயற்றப்பெற்றது.

கோட்டையூரிலிருக்கும் சிவகங்கை தாலூகா போர்டு மெம்பரும்

மதுரை டிஸ்திரிக்டு போர்டு மெம்பரும் ஆகிய மகா-ா--ா-ஸ்ரீ

பெ. மு. அ. ராம. முத்தையா செட்டியாரவர்கள்

பொருளுதவியால்

மதுரை ஸ்ரீ மீனாம்பிகை பிரசில் பதிப்பிக்கப்பெற்றது.

1904௵ ஏப்ரல்௴

இதன் விலை அணா இரண்டு.

உ

# சாற்றுக்கவிகள்

இவை

திருநெல்வேலி இந்து காலேஜ் தமிழ்ப்பண்டிதர் மகா-ள-ள-ஸ்ரீ

மே. சோ. சுப்பிரமணியக்கவிராய ரவர்களியற்றியன.

சிவகங்கை வளர்பெருமைச் சீனிமுரு குக்குரிசில்
சிறந்தை யன்பாய்த்
நவமுந்து பாம்பனக ருறைபால சுப்ரமண்ய
சாமி கோவில்
நவமுந்து கும்பாபி ஷேகமியற் றுஞ்சிறப்பை
நண்ணிக் கண்டு
வாழ்ந்து வினையறுக்கும் படிசெல்வோர் பலரவருட்
பண்பான் மிக்கோன் (1)

ஒருதலைவன் றலைவிக்குப் புகன்றுங்கு வழிநடைச்சிந்
துவந்து சொற்றான்
பெருகுபல நூல்புகன்றான் செல்வமுளான் நீதிமுறை
பிறழா தாற்றி
மருவுமுய ரதிகாரம் வாய்ந்தவனட் பினர்க்கிருகண்
மணியே போல்வான்
தருவளருஞ் சோதுகுடி வாசனப்துல் காதிறுநற்
றமிழ்வல் லோனே. (2)

இஃது

திருச்செங்கோடு முத்தமிழ் வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ

சே. கு. விசாகப்பெருமாள்முதலியா ரவர்களியற்றியது.

கனமருவுங் கலிங்கமீ ருகனிநற் றவப்புதல்வன்
கன்னி மார்கள்
அனிகமுறு மதனனிகர் அப்துல்கா திறுவலவன்
அன்பாச் சொற்ற
பனிமருவு பாம்பன்வழி நடைச்சிந்தை யிப்பொழுது
பார்ப்பார் சிந்தை
நனிமகிழுஞ் சிந்தையடுக் காதுபாம் பனுக்கெல்லும்
கண்டென்ணுறுதே.

முற்றிற்று.

குமரன் துணை.

# முகவுரை.

சிந்து என்பது தற்காலத்து அருகி வழங்கும் இசைத்தமிழின் பாகு பாடுகளில் ஒன்று. இது ஐந்துறுப்புக்களால் ஆயதோர் யாப்பு விசேடம். அவ்வுறுப்புக்களாவன: பல்லவி, அநுபல்லவி, கண்ணிகளாகிய மூன்று சரணங்கள் என்ப. இவ்வகையில் முன்னைய இரண்டுமின்றிச் சரணங்களாகிய கண்ணிகளை மட்டுமே கொண்டு நடைபெறுவன சிலவகைச் சிந்துகள். இவ்வழிநடைச்சிந்தும் இவ்வகையைச் சேர்ந்ததுதான். காவடிச் சிந்து, கும்மி முதலியவும் இவ்வகையைச் சேர்ந்தனவேயாம்.

இந்த வழிநடைச்சிந்து முப்பது கண்ணிகளையும் முதலில் இரண்டு காப்புச் செய்யுட்களையும் உடையது. கண்ணிகளொவ்வொன்றும் முதலில் இரண்டு கடைமடக்கும் அதன்பின் நான்கு கடைமடக்கும் இறுதியில் நால்வகைச் சந்தக்குறிப்பும் கொண்டு சொற்சுவை பொருட்சுவை நிறைந்து விளங்குவதை நன்கறியலாம்.

வழிநடைச்சிந்து என்ற பெயரைக்கொண்ட பல சிறு புத்தகங்களை யாம்பார்த்துளேம். அவைபெரும்பாலும் இலக்கணவழுப் பொதிந்து கற்றோர்க்கு அருவருப்பைத் தந்து சாமான்யப்பட்டு நடைபெற்றுள்ளன.

இந்தநூல் இலக்கண முறையைக் கடவாமல் செவிக்கினிமை பயக்கும். செவ்விய ஓசையுடைத்தாய்ச் சந்தச்சுவை ததும்பப்பெற்றுப் பக்திரசம் பயப்பதாக விளங்குகின்றது.

வழிநடைச்சிந்து என்ற பெயர்கொண்டுவந்த பலவற்றுள்ளும் இநூல் மிகச்சிறந்ததென்பதற்கு ஐயமில்லை.

இது சிவகங்கை வக்கீலும், இந்திரகுல ராஜவம்ச அகம்படியார் டிஸ்டிரிக்ட்டுசபைப் பிரஸிடெண்டும், தமிழபிமானியும், சீமானும், சிவநேசச் செல்வரும் ஆகிய மகா-ா-ா-ஸ்ரீ எஸ். சீனிமுருகுபிள்ளை யவர்கள் நடாத்தும் பாம்பன் பாலசுப்பிரமணியர் கோவில் கும்பாபிஷேக தரிசனைக்குச் செல்வார் பலருள் ஒரு தலைவன் தனது ஆருயிர்க்காதலிக்கு அச்சிவகங்கையிலிருந்து பாம்பன் நகர் வரையுமுள்ள மார்க்க விசேடங்களையும் பாலசுப்பிரமணியசுவாமி கோவில் கும்பாபிஷேகப் பெருமை பலவற்றையும் எடுத்துக் கூறுந்தன்மையில் விளங்கி நிற்பது.

# முகவுரை.

இதனை யியற்றியவர் சிவகங்கைத் தாலூகாபோர்டு மெம்பரும், புதுவைச் செந்தமிழ் நாவலர் மகா-௱-௱-ஸ்ரீ பு. த. செய்யப்பமுதலியா ரவர்கள் மாணாக்கரும், இளையான்குடி ஸ்பெஷல் மாஜிஸ்திரேட்டும், சோதுகுடி கிராமம் மகா-௱-௱-ஸ்ரீ மு. கலிங்கமீருகனிராவுத்த ரவர்கள் நற்றவப்புதல்வரும், காசீம் என்ற மறுநாமம் பூண்டவரும் ஆகிய மகா-௱-௱-ஸ்ரீ **எம். கே. எம். அப்துல்காதிறுராவுத்தரவர்களே.** இந்நூலாசிரியர் மகமதியராயிருந்தும் தமிழில் பெரிதும் அபிமானமுடையராய் அருமைபாராட்டி பல நூல்களை ஆராய்வதும் தமிழ்ப் புலவர்கட்கு வேண்டுமுதவி பல செய்வதும் கொண்டுள்ளவர். பரப்பிரமப்பதிகம் முதலிய பல நூல்களை யியற்றியவர். இவரியற்றுஞ் செய்யுட்கள் பலவும் இனியநடையும் கனிவும் கொண்டுள்ளன. இவர் இன்னும் பல நூல்களியற்றிப் புகழ்பெறுமாறு திருவருளைச் சிந்திக்கின்றும்.

### எண்சீர் விருத்தம்

மாமாரி நிகர்கொடையான் சிவகங்கைப் பதியில்
வாழ்சீனி முருகுவள்ளல் மனமகிழ்ந்து பாம்பன்
காமாரி யிளங்குமரன் திருக்கோவில் புதுக்கிக்
கனிவொடுசெய் கும்பாபி ஷேகநலங் காட்டித்
தேமாரி பொழிந்ததென வழிநடைச்சிந் திசைத்தான்
செந்தமிழ்முந் நீர்பருகிச் செவ்வியுறுங் கவிஞர்
பாமாரி பெயத்தாங்கும் பருப்பதநேர் புயத்தான்
பண்புடையான் விளங்கும் அப்துல் காதிறுவிற் பனனே.

இங்ஙனம்
**எம். ஆர். கந்தசாமிக் கவிராயர்,**
**மதுரை, விவேகபாநு பத்திராதிபர்.**
17—4—904

கடவுள் துணை.

# பாம்பன் பாலசுப்ரமண்யர் வழிநடைச் சிந்து.

காப்பு.

ஆசிரிய விருத்தம்.

திருமலியும் பாம்பனகர்ப் பாலசுப்ர மண்யருறை
திருக்கோவிற்கு
மருவுபெருங் கும்பாபி ஷேகநடப் பதுகண்டு
வருவோர்கட்குள்
தெரிவையொரு பத்மினிக்கோர் தலைவன்வழிநடைச்சிந்து
செப்பல் கூறப்
பிரணவத்தி னுட்பொருளா யெங்குநிறை பரம்பொருளைப்
பேணி வாழ்வாம். (க)

## சரஸ்வதி துதி.

விருத்தம்.

களங்கமிலா தடுத்தவர்க்கே யருள்புரியுந் தனதுள்ளக்
கருத்தை யார்க்கும்
விளங்கவெடுத் துரைத்தாங்கு வெண்மேனி வெள்ளாடை
வெண்முத் தாரம்
துளங்கவிலா வெள்வனசம் வெண்படிகம்கொளுங்கலைமான்
துணைப்பா தத்தை
யுளங்கருதில் வருங்கல்வி யுறுஞ்செல்வம் மெய்ஞ்ஞானம்
ஓங்கும் மாதோ (உ)

# வழி நடைச் சிந்து.

பின் சந்தக்குழிப்பு.

தந்தானன தந்தானன தந்தானன தந்தானன
தத்தத்தன தனதந்தன தத்தத்தன தனதந்தன
தனதத்தன தந்தத்தன தனதத்தன தந்தத்தன
தனதத்தன தனதத்தன தனதத்தன தனதத்தன.

## சிந்து.

(1) பத்மினிசாதிப்பெண் மானே பாம்பன்
பார்க்க வருவாய் நீ தானே அங்கு
பாலசுப் ரமண்யர் ஆலயத் தில்விதிப்
பான்மையிற் கும்பாபி ஷேகம் அதைப்
பார்ப்பவர்க் கெய்தும்வை போகம் குறைப்
பாவையின் மீதினில மோகம் கொண்ட
பண்பனுல் மேவும் நல் யோகம் மலர்

பைங்காவிவை யுங்காலனை
யுஞ்சேவினை யும்பார்வைகொள்
பச்சைக்கொடி யிடையும்பிடி
இச்சித்திடு நடையுங்கொடு
பதுமத்தின ரும்புக்கலர்
தருபொற்றன மிஞ்சப்பெறு
பனசக்கனி ரசமொத்துறு
வசனத்திலென் மனசைக்கவர் (பத்மினி)

(2) இந்த விசேடத்தை நாளும் கதி
யெய்திடச் செய்வோரைக் கேளும் திசை
யெங்கும் புகழ்சிவ கங்கை வளம்பதி
யின்கண் மகிழ்ந்துறை வாசன் நமக்
கென்று மிருந்தவிஸ் வாசன் கல்வி
யிற்பெரி யார்சக வாசன் புவி
யேத்தும் பரிமள வாசன் மதி

என்றேபல ருங்கூற
இல்ங்கானன முங்கோகிலம்
எய்ப்புற்றிடும் இசையும்பரவ
விப்புக்கினி திசையும்படி
இனிமைக்குர லும்பொற்புறு
வனசக்கர முங்கற்புடன்
இலகிப்பெரு மகிழ்வுதர
நினைவுற்றென திதயத்துறை (பத்மினி)

(3) சீதரன் சுப்பிர மணியன் தவச்
செம்மல் எனவந்த கண்ணயன் அந்தச
சிவகங்கைத் தாலூகா போர்டுஜில்லாபோர்டு
சேர்ந்தவர்க ளுள்ளதி தீரன் முறை
செப்பும்வக் கீலதி காரன் தமிழ்
தேர்ந்து கவிசெய்விஸ் தாரன் பெயர்
சீனி முருகுகு போரன் பலர்

சென்றேதுதி விண்டேநிதி
யும்போஜன முஞ்சேர்குவர்
செப்பத்தகு கொடைதந்துமி
கப்பெற்றிடு மிசைகொண்டுயர்
திருவுற்றவன் அன்புக்கணி
கலமொப்புறும் இன்பத்துண்ர
செப்புக்குடம் ஒத்துத்திகழ்
வட்டத்தனம் உற்றுபபுணர் (பத்மினி)

(4) இந்தப் பிரபலன் கீர்த்தி காதில்
ஏற்பது வோமிக நேர்த்தி இவன்
இந்த்ர குலராஜ வம்ஸ அகம்படி
யார்டிஸ்திரிக் டுச்சபை தனக்கு பிரசிடெண்ட்
இன்னமுஞ் சொல்லுவேன் உனக்கு நாளும்
இன்னுயிர்த் தோழனும் எனக்கு நெஞ்சில்
இன்பம் வளரும்பார் நினக்கு தன

தின்பாகிய நண்பாளர்கள்
அன்பாகியொ ருங்கேவர
இப்பொற்பதி தனினின்றுபு
றப்பட்டிடு தினம்வந்தருன்
எழில்பெற்றுய ரும்பட்டுடை
இடைகட்டொளி ருங்கற்பணி
இவைபற்பல வகைபெற்றணி
இசைபத்தியின் நட்டுஇத்தகி (பத்மினி)

(5) மாதே சபாபதி பிள்ளை தெரு
மார்க்கமாகத் துய்ய வெள்ளை உடை
மாட்டியே மேல்புறம் வேலாயுதசாமி
வாழ்கோவில் சென்றடி போற்றி மண
மாமலர் மாலிகை தூற்றி சுக
வாழ்வருள் வாயெனச் சாற்றி பல
வாத்திய முஞ்செவி ஏற்றி உடன்

வந்தாலெதிர் கண்டேகுமி
டந்தோறும்வ ளங்கூறுவன்
மட்டுப்பொலி சுருள்குந்தளம்
வைத்துப்பல மலரும்புனை
வனசத்தையி கழ்ந்திட்டகின்
வதனத்தில தம்பொற்புற
வனையித்தகி தனிலெத்தனை
மனிதத்திரள் கனிமொய்ப்பது (பத்மினி)

(6) தாலூகாக் கச்சேரி யிதே அது
தானேதெப் பக்குளம் மாதே அருள்
தங்கும் கௌரி விநாயகர் கோவில் ரா
ஜாக்கள் அரண்மனை பாராய் இனித்
தான்கடைவீதியும் நேராய் இதில்
தக்கவியாபாரம் சீராய் செயும்
சாமர்த்தியத்தைநீ தேராய் விலை

தந்தாலெது வுந்தாமத
மின்றியுட னின்றீகுவர்
சற்புத்தியில் எவர்மிஞ்சுவர்
ஒப்பற்றவ ணிகதந்திரர்
சரசத்திலி தம்பற்பல
சொரூபமிக்கத னம்பெற்றவர்
தருமத்திலும் நினைவுற்றவர்
இனிமற்றுன தெதிர்நிற்பது (பத்மினி)

## கும்பாபிஷேக வழிநடைச்சிந்து.

(7) பொன்னையா சாமியின் மடமாம் அது
* புவனாண்டேஸ்வரிசத்ர இடமாம் அருள்
பொங்கு மருதப்ப சாமிகோ யில்இது
பூர்வத்தி லேபல விருது பெற்ற
பூபதி யாகிய மருது பாண்டியன்
போற்றுங் குலதெய்வங் கருது தன்னைப்
பூசிப்ப வர்க்கருள தருது பசும்

பொன்போலொளி ருந்தேகமும்
மின்போலிடை யுஞ்சாரச
புஷ்பத்தொளிர் காமுங்குணி
விற்பொற்புறு நுதலும்பிறை
புரைநெற்றியும் வெண்பொட்டொடு
திலதத்தழ கும்பெற்றுயர்
புனிதத்திரு வெனவுற்றனை
யுளம்வைத்ததி மகிழ்வைத்தரு (பத்மினி)

(8) மாறு மதுரைக்கே ஏகும் ரோட்டில்
வாவாணி யங்குடி ஆகும் அதில்
வாழ்சிவ கங்கை யகம்படி யார்சர்க்கிள்
மன்னுஞ் சபையினர் கூட்டம் எதிர்
வாய்க்கதோ ரிக்குளம் நாட்டம் கொண்டு
வாழய்ய னார்கோவில் நீட்டம் மட
மங்கையர் செங்கையில் ஈட்டம் பெற

வந்தேபொருள் ந்தாவனை
யெங்கேயெனும் முன்பேபல
வைத்துப்பகர் தொழில்கொண்டசி
றப்புக்குலம் மிருகண்டணி
வளமுற்றது செஞ்சொற்கொடு
வருபொற்கொடி வண்டிற்பொலி
வரிபற்றிய விழியுற்றனை
மருளப்புரி தநசற்குணி (பத்மினி)

---

* புவனம்— அகிலம். அகிலாண்டேஸ்வரி சத்திரம்.

(9) வேந்தராம் பாண்டியர் தரிக்கும் படி
வேரி மலர்த்தொடை விரிக்கும் திகழ்
வேப்பங் குடியின் அகம்படி யார்சர்க்கிள்
மேதகு கூட்டமும் அதுவாம் முன்பு
விற்கை யிராமர்சென் றதுவாம் என
மிளிர்சுந் தரநடப் பிதுவாம் இனி
வெள்வேல் உடைமுதற் பொதுவாம் பல

வெந்தாருநி றைந்தோர்வனம்
அந்தாதெரி யும்பாரதில்
மெய்ப்பக்ஷிகள் பலசந்தமும்
மொய்ப்பத்தொனி தருகின்றன
விரவத்தவ முந்தப்புரி
பலநற்றவர் அன்புற்றிட
வியன்மத்தக வடிவிற்கன
தனபொற்குட மசையத்திகழ் (பத்மினி)

10 காட்டுரு ணித்தடா கந்தான் ஈதக்
காள்தங்கை யூருணி யுந்தான் எதிர்
கானார் பொழிலும் வயலும் புடைசூழும்
மானமதுரை போல் கேட்டு அங்யர்
கட்குள்ள பங்களா நாட்டு விவ
காரஞ்செய் முன்சீபுக் கோட்டு தந்திக்
கம்பி ஆபீஸ்பிணிப் பாட்டு நரர்

கண்டேதுயர் விண்டேஅமு
துண்டோரின்ம ருந்தோபல
கைப்பெற்றநி சுகமுந்தர
வைத்துப்பல தினமுஞ்செய்து
கவினுற்றிடு மின்புற்றத
ருமவைத்தியம் மிஞ்சப்புரி
கனபொற்பிட மிதுமற்றது
நுழறத்தெரி குலைபொற்கொடி (பத்மினி)

(11) ஏடெதிரேறிய வைகை நதி
* யிந்துபுஷ் கரணிப் பொய்கை பக்கம்
இருப்பது ஆனந்த வல்லியம் மன்கோவில்
இனிமேல்தான் புகைவண்டி ரோட்டு ஸ்டேஷன்
எய்திப் பணந்தந்து · சீட்டு வாங்கி
ஏறி யிரயில் மாட்டு போரூ
திப்பார்த் திவனூரைத் தாட்டு இனி
இந்தாருமந றுஞ்சோலை
ளோங்தேவய லுஞ்சூழற
இக்குத்தெறி தாளம்பல
கொக்குத்திரள் தமதண்டமி
தெனவைத்தனை கொண்டுற்றிடு
பரமக்குடி வந்திட்டதென்
இளமைத்திரு வளமுற்றிட
அருள்வைத்துடன் வருசற்குணி (பத்மினி)

(12) பாண்டிக்கண் மாயிது தேனே அதோ
பார்சத்தி ரக்குடி தானே சேது
பதிகள் அரசுசெய் ராமநா தபுரம்
பாங்கில் வாளாந்தர வையுமாம் இதன்
பக்கத்தில் உச்சப்பு ளியுமாம் எதிர்
பார்ப்பது மண்டபத் தையுமாம் ரயிற்
பற்றுவிட் டேபிறங் கியுமாம் பல
பங்கேருக
நந்தேறம லர்ந்தேமது
பக்கத்தினில் வழிகின்றவி
யப்புச்செறி கடல்கண்டனை
பலகப்பல்கள் வந்திட்டனை
புகைகுப்பென மூந்துற்றது
பலகைப்படி வழியுற்றெறன
தடனிற்றியோர் ,, ,, ம். (பத்மினி)

---

* சந்திரபுஷ்கரணி

(13) ஈதோபாம் பன்துறை முகமாம் செல்வோம்
எதிரிலே போஸ்டாபீஸ் அகமாம் வரி
எல்லாம் வசூல்செயும் ஸீகஸ்றம் ஆபீஸாம்
இதுமேஜிஸ் த்ரேட்இடம் என்பார் மலை
எனும்நெற்கிட் டங்கிகள் ளுன்பார் உமை
என்றிடு காளியின் அன்பார் கோவில்
இனிமேல்பர் பிதுரை இன்பார் பங்களா

என்றேபுகல் கின்றுரதை
யிங்கேதெரி யும்பாரினி
எப்பொற்பதி களிலும்பொருள்
கைப்பெற்றிடு வெருதந்திரர்
எனவட்டிநி தம்பெற்றிடு
நகரத்தர் உறும்பொற்பிடம்
இதையொப்பது புவனத்திலை
எழில்மிக்கது பலர்மொய்ப்பது (பத்மினி)

(14) காளிமுத் துப்பிள்ளை சத்ரம் இதோ
கபிதீர்த்த மேன்மைவி சித்ரம் சுற்றிக்
காணும் பலவகைத் தீபாலங் காரங்கள்
தோணும்ரூ பம்பல வாரும் எதிர்
கண்ட தொளியுறு தோராம் அது
கவின்மிகு வானவிற் சீராம் கண்டு
களிப்பவ ரோபல பேராம் இரு

கண்காணவு ளங்கூசுது
சிந்தாகுல முந்தீருது
கச்சுக்கிழி படவந்துபு
டைத்துப்பரி மளமிஞ்சிய
கனகக்குட மும்பொற்புறு
மகுடத்தழ கும்பற்றிய
கமழ்பற்பல மலர்முத்தணி
வடமிட்டெழு நகிலக்கொடி (பத்மினி)

(15) பாலகுப் பிரமண்யர் கோவில் வட
பக்கம் வயிரவர் கோவில் குட
பாலிற் பைரவ தீர்த்தமா குங்கடல்
சீலத் துடனதில் ஸ்நானம் பண்ணிப்
பண்புடன் கின்றுதி யானம் செய்துப்
பாலிரா மேசுரத் தானம் செல்லு
பவர்கட்குப் புத்ரசந் தானம் என்று

பண்பாமொழி கின்றாதை
யும்பார்முரு கன்கோவிலில்
பக்கத்தினில் அதிசுந்தர
முற்கொட்டகை யிதுகண்டவர்
பலர்சித்தமு மெந்தப்படி
மகிழ்வுற்றது சந்தக்கனி
பலவர்க்கமும் நவரத்தின
வகைபெற்றது இணையற்றது (பத்மினி)

(16) நீபாலங் காரத்தைக் காண்பாய் மிகச்
சிந்தை மகிழ்ச்சியே பூண்பாய் இந்தத்
தெப்பக்குளத்து நாற் பக்கத்தும் முச்சந்தித்
தெருவிலும் கோபுரம் போலும் அந்தத்
தேவர் உலகத்தின் மேலும் கண்ட
தில்லை இதுபோலோர் காலும் ஆதி
சேடனே கூறுதல் சாலும் பல

செஞ்சூரியர் என்றேசொல
வுங்கூடும தன்றேனிலே
செப்பத்தகும் உவமம் தவம்
முற்பெற்றது நயனம் பலர்
செயலுற்றவ ளம்பற்பல
வகைமுற்றும் விளங்குற்றது
தெரிசித்திடு துதிசொற்றிடு
கருணைக்கடல் படிவுற்றிடு (பத்மினி)

(17) கந்தன் மலரடி　போற்ற　ரவி
காதலித் தெய்தல் போற்　சாற்ற　திசை
காணும் படியொளி யோடுறு வாணங்கள்
கண்கள் களித்திடக்　கண்டு　முழக்
கத்தைச் செவிகளிற்　கொண்டு　திக்கைக்
காக்குங் கரிகள்வெ　ருண்டு　தும்பிக்
கையசைத் தோடும்ம　ருண்டு　குகா

கந்தாவெனும்　முன்பே அருள்
இந்தாவென　வந்தே அயில்
கைப்பற்றிய　சொரூபந்தனை
எய்ப்பற்றிட　இனமுந்தரு
கருணைக்கடல்　செம்பொற்பத
மலரைத்தொழ　வந்துற்றவர்
கணிதத்தினில்　அளவற்றவர்
களிவுற்றவர்　மிகுசற்சனர்　(பத்மினி)

(18) வேதபா ராயணப்　பெருக்கம்　காதில்
மேவஉண் டாகுதே　யுருக்கம்　ஒளிர்
வேலவர் ஆகிய பாலசுப் ரமண்யர்
கோலத் தரிசனை　செய்தோம்　அவர்
மீது துதிமழை　பெய்தோம்　பவ
வேரை அடியோடு　கொய்தோம்　இனி
மேற்றுயர் கொஞ்சமும்　எய்தோம்　உயர்

விண்தேவரும்　மண்தேவரும்
வந்தேதொழு　துய்ந்தார்வினை
வெப்பற்றது　ஜகம்பெறு
பொற்புற்றது　பல அந்தணர்
விழைவுற்றமு　தம்பற்பல
கறிவர்க்கமு　முண்டிட்டனர்
விபுதர்க்குறும்　அமுதச்சுவை
கடைபட்டது　கடைபட்டது　(பத்மினி)

(19) பாவலர் வித்வப்ர சங்கம் கேட்கப்
பாங்குடன் கூடிரிச் சங்கம் கெளரி
பாலராம் வேலவர் கோலம் தெருவில்நாம்
பார்த்திட வேமேவு கின்றார் வேத
பாரகர் பின்புறம் நின்றார் முன்பு
பற்பலர் அற்பொடு சென்றார் இதைப்
பார்ப்பவர் தாம்தவம் குன்றார் இரு
பந்தாடுமி ளம்பாவைய
ருங்காளைய ருஞ்சேர்குனர்
பக்ஷத்தொடு வருகின்றனர்
உச்சத்தொனி இயமுந்தின
பரிசுற்றின கம்பத்தாறு
கரிபற்பல வந்துற்றன
பணிமுற்றிய சரிகைக்குடை
விருதுக்குலம் நனிமொய்ப்பன (பத்மினி)

(20) சினி முருகவேள் கூட வந்து
சேர்ந்தவர் பேர்முறை பாட கேளு
சேணார் பொழில்சூழ் மழவரா யனேந்தல்
சோணமுத் துப்பெயர் மன்றான் மகிழ்
செம்மல் நல்லபுலி யன்றான் அன்பு
சேரும் இராமுவை யன்றான் இன்னம்
செப்புவேன் முற்றுமுன் முன்றான் திகழ்
செங்கோகன கஞ்சேரவி
ருந்தேமகிழ் சம்பூரணி
திக்கெட்டினும் உறுமங்கையர்
உற்றுப்பணி புரிசுந்தரி
சினமுற்றரி சிந்திக்காரு
விளையொத்துவி ளங்கித்தெரி
சிறுமைக்கடல் இதனைப்பிலே
எனநட்பொடு திகழ்மைக்கணி (பத்மினி)

(21) இளந்தங் குடி-துரை    சாமி    வள்ளல்
எழில்வெள்ளிக் குறிச்சியாம்    பூமி    புகழ்ந்
தேத்தகும் ராமசுவாமி சிவகங்கை
ஏர் பெறும் உச்சிமூத்    திந்த்ரன்    இணை
யில் பெரு மாளரிச்    சந்த்ரன்    வளம்
எல்வீர வலசையில்    தந்த்ரன்    இவன்
எனும் சுந்தரநாம    சந்த்ரன்    தரு

என்றேபுகல்    கின்றோர்பலர்
வந்தேபுடை    நின்றாரிவர்
எப்பொற்பதி    களினூர்புக
ழப்பெற்றவர்    தருமஞ்செய
எனிலக்கணம்    அன்பிற்கனி
வொடுபொற்குவை    முந்தத்தரும்
இயல்புற்றவர்    அருள்பெற்றவர்
சினமற்றவர்    அறிபொற்கொடி    (பத்மினி)

(22) செம்பனூர் வாழ்பெரி    யண்ணன்    சேர்வை
தேர்இவ னேயருட்    கண்ணன்    முன்சொல்
செழியனும் நல்ல புலியன் கொடுத்ததிக்
குளிர்குடை மேற்சல்லிக்    குடையாம்    அன்பு
சேரும் ராமுவையர்    கொடையாம்    இந்தத்
திவ்ய மஹாசனக்    குடையாம்    இவர்
சீர்பெறு தற்கென்ன    தடையாம்    இனிச்

சிங்காதன    முஞ்சேர்குவர்
சந்தானந    லஞ்சேர்குவர்
செப்பத்தகு    பலவின்புமி
கப்பெற்றுறை    குவரன்பொடு
தினமுற்றவர்    சிந்தைத்துயர்
களையத்தகு    பொன்கற்பணி
திரளத்தரு    கரமுற்றவர்
இசைபெற்றவர்    புகழ்மற்றிவர்    (பத்மினி)

(23) சிவகங்கைச் சுப்பய்யா திரன் செண்டா
சேர்பன்னி ரண்டுப காரன் வளம்
சேரும் மூளைக்குளம் சம்பிரி திசேர்வை
சீமான் கொடுத்தான் அ நேகம் பட்டுச்
சேலைச் சுருட்டிகள் யோகம் கொண்டு
சேர்குவர் மிக்கவை போகம் எல்லாட்
சினி முருகன்சி னேகம் இவன்

செந்தேனுமி ளம்பாகும்க
தும்பானுமி சைந்தானிகர்
செப்பப்பெறு மெனாகன்குரு
சிக்கப்புகல் மொழிகொண்டவர்
செகமூற்றிடும் எந்தப்பொரு
ளையும்அற்பொடு தந்திட்டெழில்
செறியப்புடை கணிசுற்றுவர்
இனிப்பபடி அகிலத்திலே (பத்மின்

(24) தாய் தந்தை யாகிய பேர்க்கும் சோ.
தானும்போடாதுபொன் சேர்க்கும் பல
தறிதலை யாகிய கொடியஉலோபிகள்
சண்டைக்கென் றூற்பொன்னைக் கொடுப்பார் ஐயா
தருமமென் றூற்றடி யெடுப்பார் வரும்
சாதுக்களைத்தடி கடுப்பார் புத்தி
சாற்றிறு லோவன்மந் தொடுப்பார் இந்தச்

சண்டாளர்கள் வந்தேயிது
கண்டாலுமு ளந்தேர்குவர்
சற்புத்தியு மிஞ்சுவர்
நற்பத்திமை மியண்டுவர்
தமதொக்கலை யனபுற்றனு
தினமெப்பொழு தும்பற்றுவர்
சரசப்பணி மொழிசெப்புவர்
பலர்மொய்த்துடன் மகிழச்செய்வர் (பத்மினி)

(25) ஊர்நடு வேயொரு தேமாந் தரு
உற்றுப் பழுத்தாற்போல் ஆமாம் நலன்
உள்ளவன் கொள்பொருள் வள்ளற் குணத்தாலென்
றோதுவர் கற்றறிந் தோரே இங்கே
ஓங்குபுண் யம்புரிந் தாரே திகழ்
ஊருணி நீரையொப் பாரே புல
வோர்புகல் வாரிவர் ஈரே புகழ்

ஒன்றேநிதி வந்தேறுமி
ளஞ்சேயரி னஞ்சேர்குவர்
ஒத்துப்பலர் உறவுங்கொடு
வித்வக்கவி அணிகொண்டுதம்
உரிமைத்திரு முனபெற்றதும்
இவர்வைத்ததும் விஞ்சுற்றிட
உயர்நற்கதி தனையுற்றதில்
உறையப்பெறு மகிழ்வைக்கொள்வர் (பத்மி)

(26) சிந்தை மகிழ்ந்திந்தப் புண்யம் தனைச்
சீர்பெறச்செய்வித்துக் கண்யம் பெறும்
சிவகங்கை வக்கீல் களுக்குள் ளொருசெய
சிங்கம் எனத்தகும் பூமன் இளம்
சேயிழை யார்மகிழ் காமன் வண்டு
சேரும் பரிமள தாமன் வளர்
சீனி முருகுநன் ஞமன் புகழ்

சென்றேயுயர் இந்த்ராதிய
ருங்கூறவ ளர்ந்தீரிரு
திக்குத்தலை வரும்விண்டிட
மிக்குப்பெரு கிடமுன்பருள்
செயுமற்புத கந்தப்பரன்
இவனுக்கிணை யண்டத்திலை
திருவுற்றவர் உறுமெய்ப்பயன்
இவனுற்றது தெரிபொற்கொடி (பத்மினி)

[illegible]

சேதுநா ராயண [illegible]
செம்மல் காளிமுத்துப பளை பசசை
சேர்வை குமாரன் மடவியர மாரனும
சித்திர வேல்சேர்வை வாழி எவலாச
செல்வமும் உற்றுப்பல் வாழி கையிற்
சேர்த்துப் பிடித்திட்ட கோழி கொடிச்
சேந்தன் திருவருள் ஆழி வள்ளி

செந்தேனுரை கொண்டேமகி
ழுந்தேவருள் தந்தாள்வனோர்
செப்பைத்திகழ் கனகங்கொள்டெ
ருப்பைக்கவின் ஒளிதுன்றிய
திரள்முத்தணி முந்தப்புனை
க்னகத்திரு பந்தைப்பொரு
செயமுற்படு தனமுற்றெனை
மகிழப்புரி அருமைக்கனி (பத்மினி)

(28) லக்ஷ்மண பிள்ளைதன் தவமே ஒரு
நல்லுரு வாகியுற் பவமே கொண்ட
நந்தனன் ஆகிய முத்துக் கருப்ப
[illegible]தி என்றென்றும் வாழி புகழ்
கம் காளியாபிள்ளை வாழி தரு
காதனும் செந்தில்வேல் வாழி மத
ன் முனியாண்டிவேள் வாழி இன்னம்

நம்போலிவண் வந்தேயிது
அண்டோர்துதி விண்டோர்மன
ந்பத்தியின் நிதிதந்தவர்
செப்பப்பெறு சுகமிஞ்சவர்
களினத்தவி சின்கட்டிரு
மகளுக்கெயில் முந்தத்தரு
நயமுற்றுய பவளக்கொம
அதரச்சுவை [illegible] (பத்மினி)

(29) [illegible] காவலர்க் கன்பன் சுகு
வாரிதி ஆமெனும் இன்பன் மூத்து
வள்ளல் தருஞ்சேது மூத்து மகிபதி
வாழி புலகுள்ள மட்டும் இவர்
மன்னும் புகழ்திசை எட்டும் அந்த
வானவர் வரையும் மூட்டும் இங்கு
வந்தவர்க் கு..லையோர் தட்டும் வரி

வண்டோலமி டுஞ்சோலையி
தென்றேறெதிர் கண்டோர்சொல
மட்டுப்பயில் மலர்கொண்டிசு
ருட்டுப்பெற விரிகுந்தள
வனசக்கலை மங்கைக்கிணை
சொலவிற்பன மிஞ்சப்பெறு
வனிதைக்கினி நடனக்கரு
மயிலற்புதம் மலர்பொற்கொடி (பத்மினி)

(30) தோகை நடமயில் வாழி பகை
தோற்கப் பொரும்அயில் வாழி வளர்
சோது குடிஅபதுல் காதிறு நாவலன்
சொன்ன சிந்துத்தமிழ் வாழி வள்ளி
தூயதெய் வானையும் வாழி குகன்
தோள்கள் பனிரெண்டும் வாழி அருள்
துன்னும் மலர்விழி வாழி வெகு

சொரம்பராக நட்தேசிவ
கநகாநக ரஞ்சேர்புது
சொட்டக்கனி வதிகம்பெறு
சொற்பெற்றென துளமுங்கவர்
துடியொப்பிடை அஞ்சப்பெரு
துகிலச்சுமை மிஞ்சத்திகழ்
தொடியைப்புனை கரபத்மமென்
வடிவைத்தொட மகிழ்வைப்புரி (பத்மினி)

முற்றிற்று.

# சாற்றுக்கவி.

சிவகங்கை சமஸ்தானம் வித்துவான் மகா-ள-ள-ஸ்ரீ

## அ. வில்லியப்பபிள்ளை யவர்கள் இயற்றியது.

தாதுகுடி புகுநீபத் தாமன் பாம்பன்
றலமருவு பாலசுப்ர மண்யமூர்த்தி
மீதுகுடி யரசர்முடி யரசர் வாழ்த்த
வியந்தவண்ணக் குழிப்பில்வழி நடைச்சிந் தாகச்
சீதுகுடி யளிமுரல்பண் ணிசைபோ லார்க்குஞ்
செவிக்கமுதாய் நவரசமுந் தெருட்டிச் சொன்னான்
சோதுகுடி வளரிசுலாங் குலத்திற் றோன்றுந்
துரைஅப்துல் காதிறெங்கள் சுகிர்தவானே.

வகயகை மகா-ள-ள-ஸ்ரீ ஆதிமூலம்பிள்ளையவர்கள் குமாரர்

## காத்தய்யாபிள்ளையவர்களியற்றியது.

நந்தனைய கந்தரமுங் கழைமென் றோளும்
நளினநெடுங் கட்குறமின் னைகர் நாகங்
கொர்கவிழ்பூங் கடப்பமுந்திண் மார்பிற் கொண்ட
குமரவேள் மேற்சோது குடியின் மேவும்
ஐந்தருவை கோர்கரத்தான் கலிங்க மீருன்
அரியதவத் துதித்தஅப்துல் காதி றோனென்
பைந்தமிழாற் பாம்பன்வழி நடைச்சிந் தென்னும்
பனுவலைத்தெள் ளமுதமெனப் பகர்ந்திட் டானே

சாற்றுக்கவி முற்றிற்று.

உ

சிவமயம்

# பெரியார் அர்ச்சனை மாலை

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR :: MADRAS-41.

ஞாபகார்த்த வெளியீடு

1972

சிவமயம்

# பெரியார் அர்ச்சனை மாலை

வேலுப்பிள்ளை உமாபதி

ஞாபகார்த்த வெளியீடு

1972

அச்சுப்பதிவு

ஸ்ரீ காந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | திருவள்ளுவர் அர்ச்சனைமாலை | 3 |
| 2. | ஸ்ரீ இராமகிருஷ்ணர் அர்ச்சனைமாலை | 6 |
| 3. | அன்னை சாரதாதேவி அர்ச்சனைமாலை | 12 |
| 4. | சுவாமி விவேகானந்தர் அர்ச்சனைமாலை | 19 |
| 5. | யோகர் சுவாமி அர்ச்சனைமாலை | 25 |
| 6. | ஸ்ரீ ரமணதேவர் அர்ச்சனைமாலை | 30 |
| 7. | சுவாமி இராமதாஸர் அர்ச்சனைமாலை | 36 |
| 8. | சுவாமி சிவானந்தர் அர்ச்சனைமாலை | 42 |
| 9. | அன்னை கிருஷ்ணபாய் அர்ச்சனைமாலை | 46 |

# பதிப்புரை

இச்சிறு நூலில் அடங்கிய அர்ச்சனை மாலைகள் இற்றைக்கு இருபது, முப்பது வருடங்கட்கு முன் இயற்றப்பட்டவை. குறித்த மகான்களின் பிறந்த தின விழாக்களில் இறுதி வழிபாடாக ஓதி அர்ப் பணஞ் செய்யப்பெற்றன. இன்றும் அவ்விழாக்கள் நடைபெறும் வேளைகளில் பக்தி விசுவாசத்துடன் பாடப்பெறுகின்றன. சென்ற தைமாசத்தில் நடந்த குருபூசை யொன்றில் அதற்குரிய அர்ச்சனைமாலை உள்ளத்தை உருக்கும் வகையில் ஓதப்பட்டதை முதன்முறையாகக் கேட்ட ஒரு பக்தர், ''இப்பாமாலை யாரால் இயற்றப்பட்டது ? ...'', ''எப்போ இயற்றப் பட்டது ?...'', ''அச்சுப்பிரதிகள் கிடைக்குமா ?...'' என்று ஆர்வத்துடன் கேட்டாராம். இதே கேள்வி களை முன்னரும் பலர் கேட்டதை நாம் நன்கு அறி வோம். இம்மாலைகளைப் பெரியார்களின் ஆசி முன் னின்று இயற்றியவர் பக்தர் திரு. க. இராமச்சந்திரன் அவர்கள். தமது சொந்த சாதனைக்காகப் பாடப் பெற்ற இப்பாடல்கள் தமது பிள்ளைகட்கும் நெருங் கிய அத்யாத்ம அன்பர்கட்கும் மாத்திரம், அதாவது ஆன்மீக சாதகர்கட்கு மாத்திரம், பிரயோசனப்பட் டால் போதுமென்று எண்ணி தனிநூல் வடிவில் அச்சாகி வெளியேற்றுவதில் எந்தவித ஆர்வமும் அவர் கொண்டிருக்கவில்லை.

அவரது எழுபத்தேழாவது வயதில் இப்பாமாலை கள் நூல் வடிவில் வெளிவர அயராது முயற்சி எடுத் தனர் கொழும்பு சத்சங்க அங்கத்தினர். அச்சங்க அன்பர்களால் '' குருக்கள் '' என்று மதிப்புடன் அழைக்கப்படுபவரான திரு. உ. கந்தசாமி அவர்கள் அண்மையில் சிவபதம் அடைந்த அவரது தந்தையார்

திரு. வேலுப்பிள்ளை உமாபதி அவர்களின் நினைவுமல ராக இந்நூலை அச்சேற்றி அன்பளிப்பாக அடியாருக்கு வழங்க ஆர்வத்துடன் முன்வந்தபோது ஆக்கியோன் மகிழ்வுடன் உடன்பட்டார். இவ்விருவருக்கும் எங்கள் சத்சங்கத்தின் நன்றி என்றென்றும் உரித்தாகுக.


அன்பர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் தமிழில் அர்ச்சனைமாலைகள் ஆக்கியுள்ள போதிலும் தமது நித்திய சாதனையில் வடமொழி அர்ச்சனைகளான ஸ்ரீ லலிதா த்ரிசதீ, ஸ்ரீ லலிதா அஷ்டோத்தர — சத நாமாவளிகட்கும் முக்கிய இடம் அளிக்கிறார். சமய வாதிக்கும் சமய வாணருக்குமிடையே உள்ள வித்தியாசத்தை இங்கே காண்கின்றோம்.

இந்த அர்ச்சனைமாலைகளில் குறித்த பெரியார்களின் வரலாற்றுச் சுருக்கமும் உபதேசங்களின் சாரமும் எளிய இனிய நடையில் அமைந்துள்ளன. எனவே இவற்றைப் பக்தி சிரத்தையுடன் பாராயணஞ் செய்யும் அடியார்களின் உள்ளத்தில் அந்த உன்னத கருத்துக்களெல்லாம் பதிந்து உய்கதிக்கு வழிகாட்டும் என்பது திண்ணம். இந்நூலானது எதிர்பாராத முறையில் ஸ்ரீ யோகர்சுவாமி அவர்களின் நூற்றாண்டு விழா நடக்கும் வேளையில் அவர் அர்ச்சனைமாலை நடு நாயகமாக அமைய பிரசுரிக்கப்படுவது அவரின் திருவருளை நமக்கு நினைவூட்டுகின்றதெனலாம்.

**கொழும்பு சத்சங்கம்.**

**கொழும்பு.**
**3-6-1972.**

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR :: MADRAS-41.



திருவள்ளுவர்

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR :: MADRAS-41.

# திருவள்ளுவர் அர்ச்சனைமாலை

தெய்வப் புலமைத் திருவள் ளுவராம்
மெய்வைத்த வேத விளக்கே போற்றி!
உருவெழில் நான்முகன் நாயனுர் தேவர்
மருமுதற் பாவலர் மாதானு பங்கி
பெருநா வலரெனும் பெயர்நலந் தாங்கி
குருவுரு வாய்வந்த குணக்கடல் போற்றி!
புத்தர் தோன்றிய புனிதநா ளைத்தொடர்
உத்தம அனுடத் துதித்தனை போற்றி!
மாசறு கற்பின் வாசுகி யோடு
இல்லற மாகிய நல்லறம் பேணி
வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்ததன் பின்னர்
தெய்வநிலை பெற்ற தேவே போற்றி!
பொய்யா மொழியாய் பொதுமறை தானுய்
பெருந்தெய்வ நூலாய் வாயுறை வாழ்த்தாய்
உன்னைப் போலவே ஒன்பது நாமங்கொள்
உத்தம வேதத்தை உதவினை போற்றி!
சாதிமத பேதம் சற்றேனு மின்றி
சன்மார்க்க சாதனம் சாற்றுங் குறளை
மன்னுல குய்ய மலர்ந்தனை போற்றி!
இனிய தமிழ்மொழி இலக்கிய மனைத்தின்
உரைகல் லாயதை உரைத்தனை போற்றி!
எந்தாய் மொழியின் இறவாப் பெருமைக்கு
அதனையே சான்ருய் அமைத்தனை போற்றி!
தமிழர்கள் கண்ட அகப்புற வாழ்வின்
விளக்கமும் அதுவென விளக்கினை போற்றி!
கடவுளைப் பணிதலே கற்றதன் பயனென

நடந்து காட்டி நயந்தனை போற்றி!
பற்றிலாப் பரமன் பதத்தினைப் பற்றலால்
பற்றுகள் அறுமெனப் பகர்ந்தனை போற்றி !
வெற்றி தோல்வி விருப்பு வெறுப்பு
வெம்மை தண்மை வீடு பிறப்பு
இன்ப துன்பம் இருமை வகைதெரிந்து
ஈண்டறம் பூண்ட இனத்தின் பெருமை
உலகில் உயர்ந்ததென் றுரைத்தனை போற்றி !
மனதுக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
மற்றவை பகட்டென மலர்ந்தனை போற்றி !
அவாவை அறுத்தால் அற்றது பிறவியென்று
ஆருயிர்க் கருநெறி அருளினை போற்றி !
வேண்டாமை போன்ற விழுப்பொருள் வேறு
ஈண்டில்லை யென்று இயம்பினை போற்றி !
ஒழுக்கந் தன்னை உயிரினும் ஓம்பல்
விழுப்பந் தருமென விளக்கினை போற்றி !
வாய்மையே அறத்தின் தாயக மென்று
வாழ்வுக் குய்நெறி வழங்கினை போற்றி !
இன்னா செய்தார்க்கும் இனியவை செய்தலே
சான்றோர் குணமெனச் சாற்றினை போற்றி !
கற்பன வெல்லாம் கசடறக் கற்றபின்
நிற்குக அதற்குத் தக்கவா றென்ற
அற்புத வாக்கியம் அருளினை போற்றி !
யானென தென்னுஞ் செருக்கிலா ஒருவனை
வானோரும் வாழ்த்துவர் என்றனை போற்றி !
பண்பொடு வாழ்ந்தால் மன்பதை முழுதும்
அன்பொடு மதிக்குமென் றறைந்தனை போற்றி
கண்கருத் தொத்த காதலின் சிறப்பை
எண்ணரும் முறையில் இயம்பினை போற்றி !
அறநெறி ஒழுகும் இல்லறத் தார்க்கு

பிறநெறி வேண்டாமென் றுரைத்தனை போற்றி !
மங்கலமாக மாந்தர் வாழ் வமையவும்
செங்கோ லாட்சி செழிப்புற் ேறாங்கவும்
எக்காலத் திற்கும் பொருந்திடும் தன்மையில்
எந்நாட் டினரும் ஏற்கும் முறையில்
அரசியல் இலக்கணம் அமைத்தனை போற்றி !
அன்பே இன்பம் ; அன்பே உயிர்நிலை
அன்பிலா ரெல்லாந் தோலினுற் போர்த்த
என்புபோல் வாரென் றியம்பினை போற்றி !
நெஞ்சத் துறவிலா வஞ்சத் துறவால்
எஞ்சுவ திழுக்கென் றியம்பினை போற்றி !
சமணம் பௌத்தம் சைவம் முதலாம்
எம்மதத் தினர்க்கும் சம்மத மாக
நான்மறைச் சாரம் நவின்றனை போற்றி !
இன்பமே தானும் இறையே போற்றி !
அன்பிற் குறைவிடம் ஆனாய் போற்றி !
அறத்திற் கணியாய் அமைந்தாய் போற்றி !
பொறுமைக் குதாரணம் ஆனாய் போற்றி !
துறவே வடிவாய்த் துலங்கினாய் போற்றி !
முப்பால் அருளிய முனிவனே போற்றி !
ஒப்புயர் வில்லாப் புலவனே போற்றி !
ஆரணம் அருளிய அண்ணலே போற்றி !
பூரண போற்றி ! புண்ணிய போற்றி !
போற்றி ! வள்ளுவநின் பூங்கழல் போற்றி !
போற்றி ! போற்றிநின் திருக்குறள் போற்றி !

# ஸ்ரீ இராமகிருஷ்ணர் அர்ச்சனைமாலை

கங்கை நதிபாய் வங்கஞ் செழிக்கவும்,
இராமா னந்தனுங் கிராமத் தலைவனின்
தீச்செய லதனால் திரைப்பூ ரிழந்த
திருவைக் காமார்ப் புகூர்பெற் றுய்யவும்,
காண்பா ரின்றியும் காப்பா ரின்றியும்
பன்னாள் ஈண்டுப் பட்டினி உற்றேன்
கொண்டுபோ என்னை நின்மனைக் கென்ற
ரகுவீரர் மீது இடையறு அன்புகொள்
குதிராம் சட்டஜீ குலமது தழைக்கவும்,
சந்திர மணியின் இல்லஞ் சிறக்கவும்
வந்தவ தரித்த வரதனே போற்றி !
நற்சிறப் பிழந்தே தாழ்வுற் றிருந்த
கற்பக பரதம்நற் கதிதனைப் பெற்றிட
உற்பவித் திட்ட உத்தமா போற்றி !
பிறந்ததும் வாழ்வின் முடிவைத் தெரிதர
நீறு பூசிய நின்மலா போற்றி !
காசினி புரக்கக் காயாவி லமர்ந்த
கார்வண்ண மேனியன் கருணையை விளக்க
கதாதரப் பெயரே சூடினை போற்றி !
சிறுவய ததனில் துறவிகள் தமது
உறவின் பெருமை உணர்ந்தனை போற்றி !
சிவராத் திரியன்று சிவனாக நடித்து
பவசமா தியால்மெய் மறந்தனை போற்றி !
ராசமணிப் பேர் ராணியின் கொடையால்
தக்கணேஸ் வரத்தில் தனிச்சிறப் புற்ற
முக்கணி கோயிலில் அர்ச்சக ராகி
புகழிழந் திருந்த பூசகர் தொழிற்கு
புனிதமும் பெருமையும் அளித்தனை போற்றி !

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS-41.



ஸ்ரீ இராமகிருஷ்ணர்
1836 — 1886

பவ்தா் ரணிபதும் புகலாய்க் கொண்டு
நவமான சித்திகள் நண்ணினை போற்றி !
அதேசேஷுத் திரத்தில் அரும்பெருந் தவங்கள்
பன்னீ ராண்டு பயின்றதன் பயனாய்
மன்பதைக் குய்நெறி மலர்ந்தனை போற்றி !
பெண்ணுடை யுடுத்துப் பெண்போல் நடந்து
கண்ணன் காதலில் ராதையாய் வாழ்ந்து
பிரேமையின் மகிமை விளக்கினை போற்றி !
ஆண்டாள் அடிமைத் திறந்தனை உணர்த்த
அனுமனாய் இராமனை அடைந்தனை போற்றி !
சிங்கவா கினியமா் ஜெயராம் பட்டியில்
இராமச் சந்திர மஹோபாத் யாயரின்
அருந்தவப் பேற்றால் வருந்திரு வான
சாரதா மணியைத் தாரமாய்க் கொண்டு
'பவன் பிரம்மசாரி பான்மொழி கன்னி'
எனும்பழ வாக்கின் இலக்கிய மிதுவென
இல்லறம் துலக்கிய இறையே போற்றி !
சகதா் மணியாம் சாரதா தேவியை
ஜெகதாம் பிகையாய் சிரத்தை யோடேத்தி
சோடசி பூஜை புரிந்தனை போற்றி !
தோதா புரியாம் துறவி தன்னையும்
மாதா வான பைரவி யாரையும்
குருவாய்ப் பேணி குருவாய் அவர்க்கும்
அரும்பெரும் உண்மைகள் அருளினை போற்றி !
வித்தையில் ஒப்பிலா விவேகா னந்தன்
பத்தியில் முதிர்ந்த பிரம்மா னந்தன்
சக்தி உபாசனும் சாரதா னந்தன்
சுத்த யோகியாம் சிவானந்த வள்ளல்
புத்தியிற் சிறந்த அபேதா னந்தன்

பண்டரிபுரி ராம கிருஷ்ணா னந்தன்
துரியா னந்தன் பிரேமா னந்தன்
எழுத்தறி வற்றும் ஏவலே புரிந்தும்
பழுத்த ஞானியாம் அற்புதா னந்தன்
எனும்பல உத்தம சீடரத் னங்களை
ஏற்றருள் சுரந்த ஏந்தலே போற்றி !
அல்லூர் மூலம் அவனி யெங்கும்
பாரத நாட்டின் பாரமார்த் திகத்தைப்
பரப்புதற் கிசைந்த பகவனே போற்றி !
சியாமப் புகூரிலும் காசிப் பூரிலும்
வாழ்ந்த காலத்தில் வரையறை வின்றி
வள்ளல்போல் ஞானம் வழங்கினை போற்றி !
வாய்பேச முடியா வருத்தமுற் றிருந்தும்
நோயின் கொடுமையை நோக்கா தன்பர்க்குத்
தாய்போற் கருணை காட்டினை போற்றி !
வேதம் ஆகமம் உபநிஷத் கீதை
இதிகாசம் புராணம் எல்லா வற்றிலும்
அடங்கிய தத்துவம் அனைத்தையும் எவரும்
அறியும் வண்ணம் அற்புத முறையில்
உபகதை மூலம் உரைத்தனை போற்றி !
சரியை கிரியை சாற்றிடும் யோகம்
உரியநல் ஞானம் எனும்பாதை நான்கையும்
அனுஷ்டானந் தன்னால் அருளினை போற்றி !
சைவம் வைணவம் சாக்தம் கிறிஸ்தவம்
இஸ்லா மாகிய எல்லா மதங்களின்
உண்மையைச் சாதனை உறுதியால் கண்டு
சமரஸம் அருளிய சகத்குரு போற்றி !
சாமியின் பேரால் சண்டையை மூட்டிப்
பூமியைக் கெடாதீர் என்றனை போற்றி !

அத்வைதம் துவைதம் விசிட்டாத் துவைதம்
எனும்வாதம் வீணென் றியம்பினை போற்றி !
சகுண நிர்க்குணச் சண்டையை விடுத்து
பக்தி செய்வீரெனப் பகர்ந்தனை போற்றி !
இக்கலி யுகத்தில் இறைநாம ஜெபமே
இனிய சாதனையென் றுரைத்தனை போற்றி !
சாதனை யற்ற சாஸ்திரப் படிப்பால்
ஆவது வாதென் றறைந்தனை போற்றி !
பெண் ஆண் அலியெனும் பெற்றிய போற்றி !
கண்ணனே டொன்றிய ராமனே போற்றி !
அன்னையும் அப்பனும் ஆனாய் போற்றி !
தன்னிக ரில்லாத் தற்பரா போற்றி !
சச்சி தானந்த சற்குரு போற்றி !
போக்கு வரவிலாப் பொருளே போற்றி !
வாக்கும் மனமும் கடந்தாய் போற்றி !
பக்தனே போற்றி ! பகவனே போற்றி !
முத்தனே போற்றி ! முதல்வனே போற்றி !
சின்மய போற்றி ! நின்மல போற்றி !
விமலா போற்றி ! வித்தகா போற்றி !
ஸ்ரீராம கிருஷ்ண தேவனே போற்றி !
போற்றி ! போற்றிநின் பொன்னடி போற்றி !
போற்றி ! போற்றிநின் பொன்னருள் போற்றி !

# அன்னை சாரதாதேவி அர்ச்சனைமாலை

கங்கை நதிபாய் வங்கஞ் சீர்பெற
சிங்கவா கினியமர் ஜெயராம் பட்டியில்
இராமச் சந்திர மகோபாத் தியாயரின்
அருந்தவத் துதித்த அம்பிகை போற்றி!
மஹாபதி விரதையாம் லோபா முத்திரை
சீதை சாவித்திரி திலகவதி எனும்
மாதர சிகளால் மகிமை பொருந்திய
பாரத நாட்டின் பழம்பண் புக்கோர்
உதாரண மாய்வந் துதித்தனை போற்றி!
சாரதை யென்னும் நனிப்பெயர் தாங்கி
பாரெங்கும் கீர்த்தி படைத்தனை போற்றி!
காளி யன்பிற் கரைந்து நின்ற
கதாதர நாமக் கடவுட் பித்தர்க்குத்
தாயுஞ் சேயுந் தாரமு மாக
ஓயாச் சேவை உவந்தனை போற்றி!
தக்ஷிணேஸ் வரத்தவர் தவம்புரி காலை
பக்தி சாதனைகள் பற்பல பயின்றே
மெத்தவுஞ் சித்தி மேவினை போற்றி!
பத்தா வானஅப் பரம ஹம்ஸரை
அர்த்த நாரீஸ்வர ராக்கினை போற்றி!
அன்னார் அருளிய அளப்பரு ஞானத்தைப்
பின்னாள் பலர்க்குப் பிறவிநோய் தீர
வள்ளல் போலள்ளி வழங்கினை போற்றி!
கன்னிகை யாகக் கடுந்தவங் காத்தும்
உன்னத நெறிநில் உத்தமப் புதல்வரை
மன்னுல குய்ய வளர்த்தனை போற்றி!
வேந்தர்க்கும் வேந்தாம் விவேகா னந்தர்க்கும்

MAHAMAHOPADHYAYA DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS-



அன்னைசாரதாதேவியார்

1853 — 1920

சாந்த சொரூபியாம் சாரதா னந்தர்க்கும்
அந்தமில் ஆற்றல் அருளினை போற்றி !
அறநெறி வழுவா அகோர மணியுடன்
துறவிற் சிறந்த கௌரி தாசியும்
கோலப் மாவும் யோகி யம்மையும்
மார்கறெற் நோபிள்போல் மங்கையர் பலரும்
தெய்வமாய்ப் பணிந்த தேவியே போற்றி !
பண்டிதர் பாமரர் பாலர் விருத்தர்
பெண்கள் ஆண்கள் எனும் பிரிவின்றி
மன்பதை முழுதையும் மக்களாய்க் கருதி
அன்னிய மென்பது அணுவு மின்றி
அன்புடன் காத்த அன்னையே போற்றி !
தன்பெருமை யறியாத் தனிப்பெரு மாட்டி
உன்பெருமை எளியேற் குரைத்தற் கரிதாம்
பூரண யோகியாம் ராம கிருஷ்ணரே
நாரணி யெனப்பணி நாயகி போற்றி !
தயையே வடிவாந் தாயே போற்றி !
பொறுமைக் கணிகலம் ஆனாய் போற்றி !
துறவியர் தமக்கோர் துணையே போற்றி !
நல்லவர் விரும்பும் நட்பே போற்றி !
பொல்லா வினைகள் அறுப்பாய் போற்றி !
அம்மையே ஒப்பிலா அரும்பொனே போற்றி !
இம்மைச் சுகங்கள் ஈவாய் போற்றி !
அம்மைப் பயனையும் அளிப்பாய் போற்றி !
ராஜரா ஜேஸ்வரி ரஞ்ஜனி போற்றி !
நாத ரூபிணி நடேஸ்வரி போற்றி !
மகா லக்ஷ்மி மஹேஸ்வரி போற்றி !
திரிபுர சுந்தரி தீக்ஷிதா போற்றி !
காத்யா யனியே கல்யாணி போற்றி !
ஆதி சக்தியாம் ஆரணி போற்றி !

விமலையே போற்றி ! வித்தகி போற்றி !
சங்கரி போற்றி ! சாம்பவி போற்றி !
சுந்தரி போற்றி ! சுதந்தரி போற்றி !
மாதவி போற்றி ! மனோன்மணி போற்றி !
சிற்பரை போற்றி ! சிவையே போற்றி !
பார்வதி போற்றி ! பகவதி போற்றி !
வல்லபி போற்றி ! வாணியே போற்றி !
பைரவி போற்றி ! பவானி போற்றி !
பூரணி போற்றி ! புராதனி போற்றி !
காரணி போற்றி ! கௌரியே போற்றி !
பழமையே போற்றி ! புதுமையே போற்றி !
அழகே போற்றி ! அணியே போற்றி !
கண்ணே போற்றி ! கருத்தே போற்றி !
விண்ணே போற்றி ! மணியே போற்றி !
அன்பே போற்றி ! ஆர்வமே போற்றி !
இன்பமே போற்றி ! இனிமையே போற்றி !
போற்றி ! போற்றி ! நின் பூங்கழல் போற்றி !
போற்றி ! போற்றி ! நின் பொன்னருள் போற்றி !
சரணம் சரணம் சாரதா மணியே !
சரணம் சரணம் சற்குரு தேவி !
சக்தி ஓம்சக்தி சுத்த சக்திஓம்
சக்தி ஓம்சக்தி சுத்த சக்திஓம்.



சுவாமி விவேகானந்தர்

1863 — 1902

மகாமகோபாத்தியாய
வே. சாமிநாதையர்
நிலையம்,
00090.

# சுவாமி விவேகானந்தர்
# அர்ச்சனைமாலை

கங்கை நதிபாய் வங்கநன் னாட்டின்
கவின் நகரான கல்கத் தாவில்
புத்தரின் வாழ்வின் புனிதத் தன்மையை
நித்தமும் நமக்கு நினைவூட்டத் தக்க
தர்க்க சரணரின் தனிப்பெருந் துறவால்
மிக்கப் புகழுடை தத்தர்நம் குலத்தில்
விஸ்வ நாதரின் விசேட புண்ணியமும்
காசியில் எழுந்தருள் வீரேஸ் வரரிடம்
அத்தை முறையுள்ள உத்தமி மூலம்
புவனேஸ்வரி கோரிய புனித வரமும்
பொருந்தியே கொணர்ந்த புங்கவ, போற்றி !
ருதிரோற் காரி மார்கழித் திங்களில்
சாத்வீக வேளையில் சந்திர ஹோரையில்
ஆத்மீக வாழ்விற்கோர் அணியென விளங்கி
அவதரித் திட்ட அண்ணலே போற்றி !
சித்த ருலகந் தனைவிட் டிவர்ந்து
நரேந்திர னென்னும் நாமத்தைத் தாங்கி
நானிலந் தீண்ட நயந்தனை போற்றி !
வளரும் பயிரை முளையிலே தெரியுமென
இளமையில் கற்பவை எளிதிற் கற்றே
மும்மொழிப் புலவனாய் விளங்கினை போற்றி !
விஞ்ஞானத் தோடு மெய்ஞ்ஞானம் கூட்டும்
தத்துவம் யோகம் தர்க்கம் சங்கீதம்
பக்தி சாதனைகள் பற்பல பயின்றே
மெத்தவுஞ் சித்தி மேவினை போற்றி !
வாழ்வின் வழியை விளக்கும் வயதாம்

ஈரெட் டாண்டில் ஈசப் பித்து
இதயத்தை வாட்ட இரவு பகலாய்
இறை தரிசனம் பெற் றிறையைக் காட்டும்
குருவைத் தேடி அலைந்தனை போற்றி !
பிரம சமாஜத்தின் பேச்சில் மயங்கி
விக்ரஹ வழிபாடு வெறுத்தனை போற்றி !
தாய் மாமனுன ராம்தாசர் வாக்கால்
தக்ஷிணேஸ் வரத்தமர் தயாளன் பெருமை
தன்னைக் கேட்டு மகிழ்ந்தனை போற்றி !
முன்னூரும் கூட்டும் நன்னாள் வரவே
அன்று ருடனம் மகானிடஞ் சென்று
சென்னியி லவர்தாள் சூடினை போற்றி !
பரம ஹம்ஸரின் பரிச தீக்ஷையால்
பகரொணு அனுபவம் பெற்றனை போற்றி !
தூய அன்னை சாரதா மணியின்
சேயாய் ஒழுகி அத்தேவியின் மகிமை
நேயர்கள் நமக்கெடுத் தோதினை போற்றி !
ஸ்ரீராம கிருஷ்ணர் சமாதி யுற்றபின்
அன்னார் அளித்த அளப்பரும் ஞானத்தை
அன்னை மூலம் அருந்தினை போற்றி !
கன்னி முனையில் கடுந்தவம் புரிகையில்
நீகொண்ட விரதமும் நீணிலங் காக்குமத்
தாயிடம் நீயன்று கோரிய வரங்களும்
உன்னுவார் உளத்தை உருக்கும் ஐய !
பின்னர்ப் பாரதத்தில் நிகழ்பவை யனைத்தும்
தேவியின் அருளால் தெரிந்தனை போற்றி !
விவேகானந்த ரும் வீறுடைப் பெயருடன்
அன்னையின் ஆசியோ டமெரிக்கா சென்று
அவனிக் கருள்நெறி விளக்கினை போற்றி !

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS-41.


சிக்காக் கோவில் செய்த கர்ஜனையால்
பாரத நாட்டின் பரமார்த் திகத்தைப்
பாருல கறியச் செய்தனே போற்றி !
அப்பெருந் தொண்டு அவனியில் நிலைபெற
ஒப்பிலாச் சங்கம் நிறுவினை போற்றி !
பத்தாண் டெல்லைக்குள் பலர்பல நூற்றாண்
டெடுக்கும் பணியை முடித்தனே போற்றி !
ஓயாச் சேவையால் இளைத்த உடலை
நீயாய் விரும்பி நினைத்த வண்ணமே
சுக்கிர வாரத்தில் சுபவேளை பார்த்து
சஹஸ்ரார ஜீவாத்ம பரமாத்ம ஐக்கியந்
தன்னை விளக்கும் சம்ஹிதை ஓதி
காளி தேவிக்கு ஸக்ஞ ஹோமத்துடன்
விசேட பூஜை விரும்பியே செய்தபின்
தீர்க்க சமாதியால் துறந்தனே போற்றி !
சப்த ரிஷிகளில் ஒருவ ரிவரென
உத்தம குருவால் உரைத்திடப் பெற்ற
சித்தனே யெங்கள் செல்வமே போற்றி !
அவதார மூர்த்தியாம் ஸ்ரீஇராம கிருஷ்ணரே
சிவமெனத் தொழுத செம்மலே போற்றி !
புவனேஸ்வரி மகிழ் புதல்வா போற்றி !
சாரதை வளர்த்த சதுரா போற்றி !
வங்கம் ஈந்த சிங்கமே போற்றி !
நவபா ரதத்தின் நபியே போற்றி !
அவனிக்கு ஞானம் அருளினாய் போற்றி !
நாதாந்த யோகியே நம்பனே போற்றி !
வேதாந் தத்தின் விளக்கே போற்றி !
சித்தாந் தத்தின் சிறப்பே போற்றி !
அத்து விதத்தின் அணியே போற்றி !
நிஷ்கா மியத்தின் நிறையே போற்றி !

அறிவுக் குறைவிடம் ஆனுய் போற்றி !
ஆற்றலின் ஊற்ருய் அமைந்தாய் போற்றி !
அன்பர் பணிக்கோர் அரணே போற்றி !
அப்பனே ஒப்பிலா மணியே போற்றி !
சற்சனர் சங்கத் தலைவா போற்றி !
சச்சிதா னந்த சற்குரு போற்றி !
மாசிலா விவே கானந்தனே போற்றி !
முத்தனே போற்றி ! முனிவனே போற்றி !
போற்றி ! போற்றி ! நின் பூங்கழல் போற்றி !



ஸ்ரீ யோகர் சுவாமி

1872 — 1964

# யோகர் சுவாமி அர்ச்சனைமாலை

சிவனொளி பரவும் சீர்மிகு இலங்கையில்
பவவினை தீர்க்கும் பரம வைத்தியர்
பார்ப்பதற் கிலையெனும் பெருங்குறை தீர
மைசூர் விட்டு இவ்வூர் வந்த
கடையிற் சாமியாங் கடவுட் பித்தனார்
நடையிற் காட்டி நாட்டில் பரப்பிய
பிரம்ம ஞானப் பெருநிதி யதனை,
அருமைத் துறவி அற்புத சித்தன்
நல்லூர்க் கந்தன் நற்கருணை பெற்றோன்
செல்லப்ப சாமி சேமித்து வைக்க,
வள்ளல்போ லதனை வாரி வழங்க
மாவையம் பதியில் மாண்புற வாழ்ந்த
அம்பல வாணர் அருந்தவத் துதித்த
ஒருதனி மகனும் உத்தம போற்றி!
சின்னாச்சி யம்மையார் சீருடன் பெற்ற
செல்வனே! எங்கள் சிவனே! போற்றி!
மகா யோகியென்று மண்ணுல கேத்தும்
அரவிந்தர் தோன்றிய ஆங்கிரச ஆண்டில்
வைகாசித் திங்கள் புதன் வாரத்தில்
இடப லக்கினமும் அவிட்ட நட்சத்திரமும்
உடன் பொருந்திய உத்தம வேளையில்
யோக நாதனாய் அவதரித்தனை போற்றி!
பெற்றோர் வைத்தஇப் பெருமைதரும் பெயர்
பின்னாள் வாழ்வுடன் பிணைத்திட்ட பெற்றி
என்றென் றைக்குமோர் அதிசயம் ஐயா!
போக்கும் வரவும் புணர்வுமிலாப் பொருள்
வாக்கும் மனமும் வடிவமுந் தாங்கி

காக்குமெங் காவலனாய்க் காட்சி நல்கி
தொண்ணூற் றோராண்டு மண்மீ துலாவி
கற்றோர் தமக்கும் கல்லா தவர்க்கும்
பற்றற் றவர்க்கும் பற்றுடை யோர்க்கும்
துன்பந் துடைத்துத் துயரை விலக்கி
இன்ப நிலையருள் இறையே போற்றி !
இல்லற ஞானியாம் செல்லாச்சி யம்மையின்
சொல்லரும் மகிமை துலக்கினை போற்றி !
செல்லப்ப சாமி சொல்லிய படியே
நல்லூர்த் தேரடி வாழ்வை விடுத்து
கொழும்புத் துறையேகுடி யானாய் போற்றி !
இருப்ப மரத்தடி விருப்புக் கொண்டு
இருந்த படியமர்ந் திருந்தாய் போற்றி !
கல்லா லின்கீழ் இருந்தநொல் காட்சியிங்
கெல்லாருங் காண இசைந்தனை போற்றி !
முக்திக்கும் பக்திக்கும் முதலிடம் கொடாது
சித்தியை நாடும் மக்களின் கூட்டம்
மெத்தவும் பெருகிப் பரவு மிந்நாளில்
அத்தனே ! உந்தன் அத்யாத்ம சித்திகள்
அனந்தம் ! அனந்தம் ! அற்புதம் ! அற்புதம்
அவற்றின் இரகசியம் அறிந்தோர் மிகச்சிலர்
உன்னையே தெய்வமாய் வழிபட் டோரின்
இன்னல் களையவும் இழுக்கை விலக்கவும்
அன்னியர் எவரும் அறியா முறையில்
ஆற்றிய சித்தியின் அளப்பருஞ் சிறப்பை
போற்றுந் தோறுமுளம் பூரிக்கு தையா !
என்னையும் சாட்சி யாக்கிய நின்னருள்
ஏழேழ் பிறப்பிலும் நிலைக்கும் அப்பனே !
சிவதொண்ட னெனும் சீரிய இதழை
பவவரு டத்து மார்கழித் திங்களில்

எவரு முவப்ப நிறுவினை போற்றி !
நற்சிந் தனையெனும் அற்புத நூலால்
பெற்ற பிறவியின் பேறினை அடைய
நற்கதி யெமக்கு நல்கினை போற்றி !
சங்கரர் போற்றிய சன்மார்க் கத்தை
இங்குளார் பலர் பிழையாய் விளங்கி
வேதாந்த சித்தாந்த வேற்றுமை பேசி
வீண்வா தஞ்செய் விற்பன ராயினர் ;
அன்னோர் தமக்கு அத்வைத நெறியின்
உண்மையை விளக்கி ஒற்றுமை நாட்டிய
தாய்நா டதனில் தாயுமா னவர்போல்
சேய்நா ட்டில் சேவை செய்தனை போற்றி !
புத்தரும் திருமூல சித்தரும் போலவே
''தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையுந்
தானே தான்செய்த வினைப்பயன் துய்ப்பானுந்
தானே தனக்குத் தலைவனு மாமே''
எனும்பழம் பேருண்மை உணர்த்தினை போற்றி !
''உன்னை யறிந்திடில் உனக்கொரு குறையில்லை
பின்னே பிறரிடம் பெறுவதற் கொன்றில்லை ;
உன்னுள் இருக்கும் ஒருதனிக் கடவுளே
என்னுள் உள்ளான் எங்கும் உள்ளான்
காலையும் மாலையும் கடவுளை வணங்கி
இயற்கையோ டியைந்த இல்லற நெறியில்
நல்லறம் பேணி நல்லாய் வாழுங்கள் ;
சாமியா ராகும் ஆசையை விடுமின்
என்னையுஞ் சாமி ஆக்கா தீர்கள்''
இவைபோல் பற்பல இன்னுரை கூறி
நவைதீர் வாழ்க்கை நவின்றனை போற்றி !
ஒரு பொல்லாப்பில்லை நாமொன்று மறியோம்

எனவரும் குருவின் திருவாக் கியங்களும்
ஓரேகருத் துடையன வெனும்பே ருண்மையை
''சுவாமி யோகநாதன் சொல்லிய பாட்டு
சுந்தர மான வழிதனைக் காட்டும்
ஆவியுள் ளளவும் அமுதத்தை யூட்டும்
அகம் பிரமாஸ்மி யெனமுடி சூட்டும்'' என்
றருமையாய் விளக்கி அருளினை போற்றி !
பெரும்பாலும் மக்கள் கடும்பைத் தியமென
எள்ளி நகைசெய்த செல்லப்பர் தன்னை
சிவமாய்க் கண்டு சிவமாய்ப் போற்றிச்
சென்னியி லவர்பதம் சிரத்தையோ டேந்திக்
குருபக்திக் கிணையில் குன்றே போற்றி !
குலார்ணவ தந்திரங் கூறுங் குருபக்திக்
குலகில் உதாரணம் ஆனாய் போற்றி !
''என்னை யறிவித் தெனக்கருள் செய்தவன்
என்னிலும் வேறலன் அன்னே யென்னும்
என்னிலும் வேறலன் எல்லாம் வல்லவன்
மண்ணினில் வந்தவன் அன்னே யென்னும்''
என்று குருவின் தெய்வத் தன்மையும்
குருவும் சீடனும் ஒன்றெனும் உண்மையும்
நன்று விளக்கிய நம்பனே போற்றி !
''தன்னொப் பாரில்லாத் தலைவன் பெருமையை
என்னால் எழுதிக் காட்ட முடியுமோ ?''
என்று சோல்வெரிப் பிரபுவின் மைந்தன்
சாந்தன் போற்றும் சற்குரு போற்றி!
சோப கிருது பங்குனி மாதத்தில்
சுக்கில பட்ச ஏகாதசித் திதி
ஆயிலியத் துடன் அணைந்திடும் வேளையில்
ஓயாச் சேவையால் இளைத்த உடலை
நீத்து நிர்வாணம் அடைந்தனை போற்றி !
வேதாந்த சித்தாந்த சமரசங் கண்ட

வித்தகச் சித்தர் கணத்தைச் சேர்ந்த
சுத்தனே அளப்பருஞ் சோதியே போற்றி !
அன்னையும் அப்பனும் ஆனாய் போற்றி !
தன்னிக ரில்லாத் தற்பரா போற்றி !
அன்புட னணைத்து அருள்வாய் போற்றி !
ஆத்திரத் தோடேசித் திருத்துவாய் போற்றி !
இகபர சுகங்களை ஈவாய் போற்றி !
கண்ணே போற்றி ! கருத்தே போற்றி !
விண்ணே போற்றி ! மணியே போற்றி !
விமலா போற்றி ! விநாயகா போற்றி !
யோகா போற்றி ! தியாகா போற்றி !
கோவே போற்றி ! குருவே போற்றி !
தேவே போற்றி ! திருவே போற்றி !
போற்றி ! போற்றி ! நின்பொன்னடி போற்றி !
போற்றி ! புங்கவ நின்பொன்னருள் போற்றி !

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS-41

# ஸ்ரீ ரமணதேவர் அர்ச்சனைமாலை

அத்தன் அடியார் அச்சுதன் அன்பர்
சித்தர்கள் யோகிகள் சீவன் முத்தர்கள்
தொன்று தொட்டு தோன்று தென்னாட்டில்
சங்கம் விளங்கித் தமிழை வளர்த்தும்
மங்கையர்க் கரசியால் சைவந் தழைத்தும்
மங்காப் புகழுடை பாண்டியைச் சேர்ந்த
தெய்வச் சுழியற் சிவஸ்தலம் சீர்பெற
வையத்து வந்தவ தரித்தனே போற்றி!
சுந்தரர் பெற்ற சுகமுனி போற்றி!
அழகம்மை யார்செய் அருந்தவங் கண்டு
குழந்தை உருக்கொள் குமரனே போற்றி!
பிறந்ததும் குருட்டுப் பெண்ணுக்குப் பார்வை
திறந்தருள் சுரந்த தேவே போற்றி!
வேங்கட ராமன் எனும்பெயர் தாங்கி
ஈங்கெமை ஆட்கொள் இறைவா போற்றி!
மாலயன் காணு மலரடி எமக்காய்
ஞாலத்தைத் தீண்ட நயந்தனே போற்றி!
இதய குகையின் இருளைக் கடிய
உதய ரவிபோல் உதித்தனே போற்றி!
அங்கயற் கண்ணி அளித்த பேறதனை
எங்கட் கருள இசைந்தனே போற்றி!
அண்ணு சொன்னதை அறிவுரை யாய்க்கொண்டு
அண்ணு மலைசேர் ஐயனே போற்றி!
அருண கிரியின் ஆத்தும ஜோதியாய்
குருவாய் எழுந்தருள் குகனே போற்றி!
ஐம்பத்து நான்காண்டு அருணையில் அமர்ந்தெம்
வெம்பவந் தீர்வடி வேலனே போற்றி!



ஸ்ரீ ரமண மஹரிஷிகள்

1879 — 1950

தன்னிக ரிலாச்சனற் குமரனாய் வந்து
முன்னான் மறைபயில் முறைதனை விடுத்து
கல்லாமற் கற்றதைக் காதால் கேளாற்குச்
சொல்லாமற் சொன்னசுப்ர மண்யா போற்றி !
சம்பந்த ராய்ச்சமண் சாய்த்தநீ பின்னர்
எம்மதத் தினரையும் ஏற்றசீர் போற்றி !
எம்முருக் கொண்டு எம்மொடு பழகியெம்
மும்மலங் கடிந்தருள் முதல்வனே போற்றி !
கருணைச் சோதி கனலும் விழியால்
மரண பயத்தை மாற்றினை போற்றி !
தேவருங் காணாத் திருவடி காட்டி
ஓவலில் சாந்தி உதவினை போற்றி !
கல்லா லின்கீழ்க் காட்டிய காட்சியிங்
கெல்லாருங் காண இசைந்தனை போற்றி !
அழியாப் பொருளில் அழியா தமர்ந்தே
விழியால் அதன்வழி விளக்கினை போற்றி !
கற்றன ராயினுங் கல்லா ராயினும்
அற்றனம் யாமென அடைந்தவர் தமக்குக்
காலம் பார்த்துக் கருத்தள வாது
சீலம் நோக்காது தீக்குணம் கொளாது
கருணை நிழல்தந்த கற்பகம் போற்றி !
அரசன் ஆயினும் ஆண்டி ஆயினும்
சரிச மானமாய்த் தன்முன் அமர்த்தி
விரிமறை விளக்கிய வித்தகா போற்றி !
'ஸத்திய ஸந்தன் தவராஜ சிங்கன்
உத்தம மஹர்ஷி உக்கிர தபஸி' யென
கணபதி முனிவராங் காவிய கண்டரால்
வணங்கிடப் பெற்ற வள்ளலே போற்றி !
அன்னார் சூட்டிய 'ரமண' எனும்பேர்
மன்னுல கறிய மகிழ்ந்தனை போற்றி !

சாந்தித் தொண்டில் காலங் கழித்தபின்
சாந்தி தேடிச் சரணடைந் திட்ட
முகவைக் கண்ண முருகனார் பாடல்
அகமகிழ்ந் தேற்ற அண்ணலே போற்றி !
உன்னையே கதியென் றுறுதி பூண்ட
அன்னைக் கரும்பதம் அருளினை போற்றி !
கிருஷ்ணன் புத்தன் கிறிஸ்து முகம்மது
அருளிய தொன்றேயென் றறைந்தனை போற்றி !
மேற்கும் கிழக்கும் தெற்கும் வடக்கும்
ஏற்கும் புதுவழி காட்டினை போற்றி !
உள்ளது நாற்பது எனும்புது மறையால்
உள்ள பொருள்தனை உணர்த்தினை போற்றி !
கருக்குழி விழாதுநற் கதிபெற் றுய்ய
சுருக்கவழி காட்டிய சுத்தனே போற்றி !
நினைவே உருவாய் நிமிர்ந்து நிற்கும்
மனம்மாய் மார்க்கம் மலர்ந்தனை போற்றி !
சித்தமாம் பொருளைத் தேர்தலே மேலாஞ்
சித்தியென் றுணர்த்திய செம்மலே போற்றி !
ஊனவாழ் வொழிந்து உயர்ந்த பேரின்ப
ஞானவாழ் வருளும் நம்பனே போற்றி !
சாந்தக் கடலாய்ச் சச்சிதா னந்தனாய்
மாந்தரை உயச்செய் மகிபனே போற்றி !
தானே தானாந் தத்துவ முணர்த்தி
மோன நிலைநின்று முழுவுல கிற்கும்
ஞான நெறியருள் நாதனே போற்றி !
உள்வெளி யற்ற உத்தமா, உனது
உள்ளும் அசலமாய் வெளியும் அசலமாய்
உடனிருந் தோரின் உள்ளமும் அசலமாய்
அனைத்தும் அசைவின்றி அமைதியில் ஆழ
ஜோதியாய் எழுந்து ஜோதியிற் கலந்தே

ஜோதிநின் சொரூபமென் றுணர்த்தினை போற்றி !
அண்ணு மலைக்கோர் அணியே போற்றி !
உண்ணு முலைமகிழ் மைந்தா போற்றி !
அன்னையும் அப்பனும் ஆனாய் போற்றி !
நன்னிக ரில்லாத் தற்பரா போற்றி !
கண்டவர் ஐயங் களைந்தாய் போற்றி !
வெள்ளக் கருணைப் பெருக்கே போற்றி !
கள்வர்க்குங் கருணை காட்டினை போற்றி !
போக்கு வரவிலாப் பொருளே போற்றி !
வாக்கும் மனமுங் கடந்தாய் போற்றி !
பத்தனே போற்றி ! பகவனே போற்றி !
முத்தனே போற்றி ! முனைவனே போற்றி !
கண்ணே போற்றி ! கருத்தே போற்றி !
விண்ணே போற்றி ! மணியே போற்றி !
எண்ணே போற்றி ! எழுத்தே போற்றி !
கோவே போற்றி ! குருவே போற்றி !
தேவே போற்றி ! திருவே போற்றி !
விமலா போற்றி ! வித்தகா போற்றி !
குமரா போற்றி ! ரமணு போற்றி !
போற்றி ! போற்றி ! நின்பொன்னடி போற்றி !
போற்றிவெங் கடநின் பொன்னருள் போற்றி !

# சுவாமி இராமதாஸர் அர்ச்சனைமாலை

நிவிர்த்தி நாதரொடு ஞானேச் வரரும்
நாம தேவரும் ஏக நாதரும்
சிவாஜி மன்னன் சிந்தையி லமர்ந்த
துக்கா ராமுடன் அவர் துணையான
சமர்த்த ராம தாசரும் தொடர்ந்தே
பக்தி நெறியைப் பரவச் செய்தபின்
மகிமை யுற்ற மகாராஸ் ஷிரத்தின்
பார மார்த்திகம் பாரெங்கும் பரவ
கன்னடம் செய்த கனபுண் ணியத்தால்
பக்தியிற் சிறந்த பழங்குடி யதனில்
பூரணை யோடு அனுமன் ஜயந்தியும்
பொருந்திய நல்ல சுபவேளை தன்னில்
மன்னுயிர் உய்யவந் துதித்தனை போற்றி !
பழம் பதியான பண்டரி புரத்தில்
பாங்குற அமர்ந்தே பக்தர்க் கருளும்
விட்டலின் திருப்பெயர் வீறுடன் தாங்கி
உற்றார் உறவினர் உளம் களித்திடவே
பற்பல சாஸ்திரம் பயின்றனை போற்றி !
நாடகக் கலையில் நன்கு தேறி
சமார்த்த ராம தாசரின் சரிதையில்
அப்பெரியா ராக வேடந் தாங்கி
மெத்தவும் கீர்த்தி எய்தினை போற்றி !
இளம்வய ததனில் அச்சிறு அனுபவம்
பசுமரத் தாணி பதிந்தாற் போல
பின்னாள் வாழ்வைப் பிரசித்தம் செய்ய
முன்னறி குறியாய்ப் பெற்றனை போற்றி !
காசுப் பித்தும் காணிப் பித்தும்



சுவாமி இராமதாசர்

1884 — 1963

காமப் பித்தும் மலிந்த இக்கலியில்
ஈசப் பித்து உளத்தை வாட்ட
பெற்ற தந்தையாம் பால கிருஷ்ணரையே
உற்ற குருவாய் ஏற்றனை போற்றி !
அன்னார் அருளிய உபதே சத்தை
அல்லும் பகலும் சாதனை செய்தே
அளப்பரும் சித்தி எய்தினை போற்றி !
மனக்கூட்டி னின்றும் உயிர்க்கிளி யானது
கனவிலும் நனவிலும் ராமா எனக்கூவ
எளிய இனிய தாசராய் மாறி
எங்கும் அந்த ராமனே கண்டு
எல்லாம் ராமன் செயலென உணர்ந்து
கன்னிமுனை யிருந்து கயிலை வரைக்கும்
புண்ணிய யாத்திரை செய்தனை போற்றி !
அருணா சலத்தில் அப்பன் ரமணரின்
ஆசி பெற்று அருந்தவம் புரிந்து
ஆத்ம சாதனம் அடைந்தனை போற்றி !
பெற்ற அனுபவம் பிறர்க்கும் பயன்பட
ஆங்கிலந் தன்னில் அருளினை போற்றி !
உன்னையே கதியென் றடைக்கலம் புகுந்த
அன்னை கிருஷ்ணா பாயாம் பக்தையின்
ஆர்வந் திர ஆச்சிரமம் அமைத்தே
அமைதி தேடி வந்தடை அன்பர்க்கு
ஆனந்தம் அளிக்க இசைந்தனை போற்றி !
அவனியின் பற்பல திசைகளி லிருந்தே
ஆனந்தாச் சிரமம் வந்து சேரும்
வசதிகள் இல்லாப் பக்த கோடிகட்கு
அருளது பாலிக்க திருவுளங் கொண்டு
உலக யாத்திரை உவந்தனை போற்றி !
"நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே

திண்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
ஜென்மமும் மரணமும் இன்றித் தேயுமே
இம்மையே ராமவென் றெழுத் திரண்டினால்''
என்ற கம்பன் மணிவாக் குக்கோர்
இணையில் உதாரணம் ஆனாய் போற்றி !
நானிலம் உய்ய நாற்பது ஆண்டாய்
நற்றவம் செய்து நலிந்த உடலை
ஆடிப் பூரத்தை அடுத்த நன்னாளில்
குருவாரத் தோடு கருட பஞ்சமியும்
பொருந்திய உத்தம சுபவேளை தன்னில்
உதறித் தள்ளி உயர்வுறு சமாதியாம்
கடைசி லீலை காட்டினை போற்றி !
பரந்தஇவ் வுலகில் 'பப்பா' என்றால்
பகவா ! உன்னையே குறிந்திடும் அன்றோ
இக்கலி யுகத்தில் இறைநாம ஜெபமே
இணையில் சாதனையென் றியம்பினை போற்றி !
அப்பனே ! ஒப்பிலா மணியே போற்றி !
அடியார்க் கமுதம் ஆனாய் போற்றி !
அன்பருக் கென்றும் இனியாய் போற்றி !
அளப்பரும் கருணை நிதியே போற்றி !
ஆனந்த சாகரத் தமுதே போற்றி !
ஆனந்தாஸ் சிரம குருவே போற்றி !
இன்பமும் துன்பமும் கடந்தாய் போற்றி !
ஈறிலாக் கருணைவா ருதியே போற்றி !
உள்ளத் துள்ளே உறைவாய் போற்றி !
ஊமைக் கெழுத்தறி வித்தாய் போற்றி !
எம்மை யாண்ட இறைவா போற்றி !
ஏகமனே கமாய் இருந்தாய் போற்றி !
ஐயந் தவிர்த்தெமை ஆண்டாய் போற்றி !
ஒன்றிய மனந்தொறும் நின்றாய் போற்றி!

ஓங்கா ரத்தின் ஒளியே போற்றி!
ஔவியம் பெருமை அழிந்தாய் போற்றி!
கருணைக் கிருப்பிடம் ஆனாய் போற்றி!
சச்சிதா னந்த சற்குரு போற்றி!
சமரசம் வளர்த்த ஜகத்குரு போற்றி!
அழகா போற்றி! அமலா போற்றி!
விமலா போற்றி! வித்தகா போற்றி!
ஸ்ரீராம தாச குருவே போற்றி!
வாழ்க வாழ்க நின்மலர்ப் பாதம்
வாழ்க வாழ்க நின்பதம் அடைந்தோர்
வாழ்க ஆனந்தம் ஈந்திடும் ஆச்சிரமம்
வாழ்க வாழ்க வையகம் எல்லாம்.

# சுவாமி சிவானந்தர் அர்ச்சனைமாலை

பத்தமடை தனிற் பார்வதி தனக்கு
உத்தம மகனாய் உதித்தனை போற்றி!
தாசில் தாராந் தவமுடை வெங்குவின்
மாசிலா மணியாய் வந்தனை போற்றி !
அப்பைய திட்சிதர் ஆண்ட நல்மரபில்
குப்புச் சாமியாய்க் குலவினை போற்றி !
அன்னவர் ஆத்மாவே உன்னுட லுற்றதாய்
மன்னுல கேத்த மன்னினை போற்றி !
தந்தையைப் போலே தளரா முறையில்
சிந்தையில் சிவவுரு வைத்தனை போற்றி !
சின்ன வயசில் சிவநாம ஜெபத்தை
உன்னத நெறியா யுணர்ந்தனை போற்றி !
திருச்சியை அடைந்து திறமுடன் கற்றே
மருத்துவ நூல்பயில் மருந்தே போற்றி !
மக்க ளுடற்பிணி மாற்றுந் தொழிலில்
மிக்கவுஞ் சித்தி யடைந்தனை போற்றி !
சிங்கப்பூரிலும் செம்பிலா னிலும்
எங்கும் கீர்த்தி எய்தினை போற்றி !
நன்னலி கொண்டு தாய்போற் பேணி
புண்ணியவான் பட்டம் பெற்றனை போற்றி !
விவேகா னந்தரின் வீரகர்ச் சனையால்
விவேக வைராக்கிய முற்றனை போற்றி !
பகவான் ரமணரின் பார்வை பெற்றபின்
சுகவாழ்வு துறந்த சுத்தனே போற்றி !
சிவநாமத் துடன் சேவையி லிறங்கி
நவமான சித்திகள் நண்ணினை போற்றி !
பவப்பிணி போக்க பத்திரிநாத் செல்லும்
தவத்தினர்க் குடற்பிணி தவிர்க்கும் நோக்கால்
சுவர்க்காஸ் ரமசேவை சுமந்தனை போற்றி !
அஷ்டாங்க யோகம் அனைத்தையும் பயின்று



சுவாமி சிவானந்தர்

1887 — 1963

இஷ்ட சித்திகள் எய்தினை போற்றி !
வேதம் ஆகமம் வேறுள கலையெலாம்
ஓதும் முறைகளில் ஒப்பிலாய் போற்றி !
எம்மதத் தினரும் ஏற்றிடும் முறையில்
எம்மதக் கொள்கை இயம்புவாய் போற்றி !
வசிட்டர் தொடக்கம் வள்ளலார் வரைக்கும்
விள்ளரும் ஞானிகள் விளம்பிய வெல்லாம்
தெள்ளித் தந்தருள் தேவே போற்றி !
பகவத் கீதையின் பாதை நான்கினையும்
சகமுழு தறியச் சாற்றினை போற்றி !
சரியை கிரியை சாற்றிடும் யோகம்
உரியநல் ஞான மெனும்படி நான்கையும்
சரிவர விளக்கும் சைவனே போற்றி !
ஆதி சங்கரர் ஆரிய மொழியில்
ஓதிய தெல்லாம் உலகு நன்கறிய
ஆங்கிலந் தன்னில் அருளினாய் போற்றி !
ஆனந்தக் குடீரில் அடியரோ டுறைந்து
ஞானம் பொழியும் நாதனே போற்றி !
அன்புடன் வந்து அடைக்கலம் புகுவோர்
துன்பந் துடைக்கும் துரையே போற்றி !
தன்னை யடைபவர் தாளினை தொடுமுன்
அன்னவ ரடிபணி அண்ணலே போற்றி !
இருளிடர் போக்கும் இரவிபோ லிருந்துங்
குருவெனுஞ் செருக்கிலாக் குணமே போற்றி !
தெய்வ நெறியாந் திருக் கழகத்தால்
உய்வழி உலகுக் குணர்த்தினை போற்றி !
அத்தனே போற்றி ! அழகனே போற்றி !
முத்தனே போற்றி ! முதல்வனே போற்றி !
பத்தனே போற்றி ! பகவனே போற்றி !
வித்தனே போற்றி ! விமலனே போற்றி !
சித்தனே போற்றி ! சிவானந்த போற்றி !
போற்றி ! போற்றிநின் பூங்கழல் போற்றி !

# அன்னை கிருஷ்ணாபாய் அர்ச்சனைமாலை

மன்னன் சிவாஜியின் மகத்தான சேவையால்
உன்னத நிலைபெறும் உத்தம நாட்டில்
சக்குபா யாலும் சாந்தபா யாலும்
மிக்க புகழுடை மஹாராஷ் டிரத்தில்
முந்திய பெருமை பிந்துறும் முறையில்
வந்தவ தரித்த சுந்தரி போற்றி !
சோப கிருதுவில் சுபகன்னித் திங்களில்
சோபை விளங்கத் தோன்றினை போற்றி !
துன்புறும் மக்கள் தொகுதிக் குதவ
அன்புருக் கொண்டவ தரித்தனை போற்றி !
பிறந்த உடனே சிறந்த துறவியின்
உறவினைப் பெற்ற உத்தமி போற்றி !
வளரும் பயிரை முளையில் தெரியுமெனும்
வாக்குக் கிணங்க வளர்ந்தனை போற்றி !
பத்தாம் ஆண்டில் பிதாவின் பிரிவால்
சித்தவை ராக்கிய முற்றனை போற்றி !
பதின்மூன் றளவில் பத்தாவை யடைந்து
பதிவிரதா தர்மம் விளக்கினை போற்றி !
இருபதாம் வயதில் இறப்பின் மாண்பைக்
குருமூலம் அறியக் கோரினை போற்றி !
ஈசப் பித்து இதயத்தை வாட்ட
பாசங்க ளெல்லாம் விடுத்தனை போற்றி !
சித்தா ரூடர் சிவநாமம் அருள
பக்திசா தனைகள் பயின்றனை போற்றி !
அத்தவத் தானும் அமைதி கிட்டாமையின்
உத்தம குருவைத் தேடினை போற்றி !
தென்கன் னடஞ்செய் சிவபுண் ணியத்தால்



அன்னை கிருஷ்ணபாய்

1903 —

உன்னரு மாய்வந் துலகின் இருள்கடி
முனிராம நாசரின் முளரித்தா ளடைந்து
இனித்துய ருருநிலை எய்தினை போற்றி !
அன்னவர்க் கன்னையாய் அருங்கினி லமர்ந்தே
பன்னருஞ் சேவை புரிந்தனை போற்றி !
மன்பதை முழுதையும் மக்களாய்க் கருதி
உன்செல்வர் பாசம் உதறினை போற்றி !
சின்னக் குணமுடைச் சிறுநெறி யாளரால்
இன்னல்கள் பற்பல எய்தினை போற்றி !
இன்னா செய்தார்க் கினியவே செய்வதில்
தன்னிக ரில்லாத் தற்பரை போற்றி !
ஓதா துணர்ந்த மூதறி வுடனே
கீதை யோதுநிஷ் காமிய கர்மப்
பாதையை வாழ்வாய் விளக்குவாய் போற்றி !
ஆதர வில்லா ஹரிசனங் கட்கு
மாதா வாய்ப்பணி புரிவாய் போற்றி !
ஆனந்தாஸ் ரமமாம் அருள் நிலையத்தில்
ஞானமழை பொழி நாயகி போற்றி !
தன்பெருமை யறியாத் தனிப்பெரு மாட்டி
உன்பெருமை எவர்க்கும் உரைத்தல் அரிதாம்
ஓயாக் கவலையால் உளம் நைந்துருகிச்
சேய்போல் வந்துன் சேவடி யடைந்து
நீயே கதியென நிற்கு மன்பர்தந்
தாயே ! கிருஷ்ண பாயே போற்றி !
அன்பே போற்றி ! அழகே போற்றி !
இன்பே போற்றி ! இறைவீ போற்றி !
பணியே போற்றி ! பயனே போற்றி !
துணையே போற்றி ! தூய்மையே போற்றி !
அறிவே போற்றி ! ஆற்றலே போற்றி !
நெறியே போற்றி ! நிறைவே போற்றி !

குறியே போற்றி ! குணமே போற்றி !
பொறையே போற்றி ! போதமே போற்றி !
சங்கரி போற்றி ! சாம்பவி போற்றி !
சக்தியே போற்றி ! சாந்தமே போற்றி !
சித்தியே போற்றி ! சிவையே போற்றி !
நாரணி போற்றி ! நாயகி போற்றி !
பூரணி போற்றி ! புராந்தகி போற்றி !
போற்றி ! போற்றிநின் பூங்கழல் போற்றி !

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR :: MADRAS-41

இந்நூலின்

பிரதிகள் பெற விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

★

உமாபதி கந்தசாமி
'உமா பதி'
57, பலாலி றோட்,
யாழ்ப்பாணம்.

★

ஹரன் ஜுவல்லர்ஸ்
50, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 444

ஸ்ரீ காந்தா அச்சகம், யாழ்ப்பாணம். தொலைபேசி: 256